

பிணங்கள்
ஏ.வி.பி. ஆசைத்தம்பி

# பிணங்கள்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

இரண்டாம் பதிப்பு—ஆகஸ்ட், 1956.

உரிமையுடையது.

விலை ரூ. 1—0—0

அச்சிட்டோர் பாலுஸேரி அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

# பிணத்தின் முன்......!

பிணம்! மனித வாழ்க்கையின்—நடமாடும் மனித உயிரின்—மழலை மொழி பேசித் தவழ்ந்து விளையாடி—காளைப் பருவத்திலே ஆடி ஓடி விளையாடி—கல்வி பல கற்று—திருமணம் நடந்து—இல்வாழ்வில் இன்பம் சுவைத்து—இன்பத்தின் எல்லை கண்டு—இளஞ் சிறுரைப் பெற்றெடுத்து—எதிர்காலச் சிங்கத் தமிழ்ப் பரம்பரையை உண்டாக்கிவைத்து—நல்ல குடும்பமாக—நல்லதொரு முன் மாதிரியை நாட்டுக்குத் தந்திடப் போகும்—எதிர்கால உலகுக்கு—பிணங்கள் என்ற தலைப்பு—ஒரு துன்பச் செய்திதான்!

வாழ்வின் முடிவு—பிணம்! பிணமாவதற்கு முன்னர்தான் மனிதன் வாழ்கிறான்!

வாழ்க்கைப் பாதை—வளமற்றதாக அமைந்து விடின்—குறிப்பாகக் காதல் பாதை தவறிவிட்டால்—வாழ்விலேயே—வாழ்வின் ஒவ்வொரு மூச்சிலுமே—வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது.

இத்தகைய 'சூழ்நிலைகள்,' நாட்டினரின் ஒரு பகுதியை, மக்களாக வாழவிடாது, நடைப் பிணங்களாய்

வாழவிடும் நாட்டின் பற்பல கோணங்களின் படப்பிடிப்பே,—எதிரொலியே இந்நூல்!

மனித வாழ்வின் துயர எடுகளைப் புரட்டி, புரையோடிப்போன புண்ணைக் கிளறிக் காட்டி—நம்மைச் சுற்றிலும் நமது சிந்தனையைக் கிளறி விட்டு—நாட்டைக் காணுங்கள் என்று அழைக்கிறார் ஆசைத்தம்பி!

இந்நூலை எங்கள் நிலைய வாயிலாக வெளியிட இசைவு தந்த ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

பதிப்பாளர்.

# பிணங்கள்

கடும் இரவு. ஊர் உறங்கியது. ஆள் நடமாட்டம் இல்லாத அந்த ரோட்டிலே, அந்த நேரம் ஒரு கார் பயங்கர வேகத்தில் வந்துகொண்டிருந்தது. அங்கும் இங்கும் வளைந்து, பங்களாக்கள் இருந்த சாலைவழியாக அந்தக் கார் வந்தது. தீயணைக்கும் கார்கூட இத்தனை வேகமாக வந்ததில்லை. மிக மிக அவசரந்தான் அத்தனை வேகத்திற்குக் காரணம் என்று நன்கு தெரிந்தது.

'கிரீச்' என்ற சப்தத்திற்குப்பின் அந்தக் கார் ரோட்டின் ஓரத்தில் நின்றது. காரை ஓட்டி வந்தவனே கையிலே ஒரு தோல் பெட்டியுடன் பங்களாவுக்கு உள்ளே ஓடினார்.

பங்களாவின் முன்புறம், "பாரிஸ்டர் பார்த்தசாரதி" என்ற பலகை தொங்கியது.

*பங்களாவின் ஹாலில் பாரிஸ்டர் பார்த்தசாரதி நெடுக்கும் முடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவர் முகத்திலே சோகம் படர்ந்திருந்தது.*

"ஐயோ! அம்மா! அப்பா!"

இப்படி ஒரு பெண்ணின் வேதனை அலறல் அடிக்கடி கேட்டது. இந்த சப்தம் வரும்போதெல்லாம் பாரிஸ்டர் முகத்திலே பதட்டம் தாண்டவமாடும்.

காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்த கனவானைக் கண்டதும், வேலைக்கார சொக்கன் ஓடோடி வந்து, "எஜமான்! அவரு வந்துட்டாரு............" என்று சொன்னான்.

"டாக்டர் சார்! நிலைமை ரொம்ப மோசமாயிருக்கு. குழந்தை செத்தாலுஞ் சரி. தாய் பிழைக்கட்டும்" இப்படி பாரிஸ்டர் சொன்னதும் வேலைக்கார சொக்கனுக்கு ஒரே ஆச்சரியம். தன் எஜமானரா குழந்தை சாகட்டும் என்று சொன்னார்? கல்யாணமாகி பன்னிரண்டு வருஷமாகியும் குழந்தை யில்லையே என்று அவர் பட்ட கவலைக்கு எல்லை உண்டா? அவர் செய்த மோட்ச பிரயாண யாத்திரைக்குக் கணக்கு உண்டா? செய்த தான தருமங்கள் கொஞ்சமா? இப்படிப்பட்ட பாரிஸ்டரா குழந்தை சாகட்டும் என்று டாக்டரிடம் சொன்னார்?

ஆம். பாரிஸ்டர்தான் சொன்னார். குழந்தை செத்தால்........நாளையே இன்னொன்று! ஆனால் தாய்

செத்தால்...? அதை நினைத்துப் பார்க்கவே பாரிஸ்டர் பதறினர்.

அப்போதுரும் கதவு திறந்தது. டாக்டர் வெளியே வந்தார்.

"எப்படி சார் இருக்கிறது?"

"பெண்குழந்தை பிறந்துவிட்டது."

பாரிஸ்டர் பரவசத்திலே மூழ்கினர். ஆனல்——

"பாரிஸ்டர்! கவலைப்படாதீர்கள். தாய்க்கு........ உயிரில்லை."

"ஐயோ ஞானம்!"

பாரிஸ்டர் பச்சைக்குழந்தையைப்போல அழுதார். குழந்தைகள் அழுதால்........அதைப் பெற்றெடுத்தவர்கள் ஓடோடி வந்து தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆனல், பெரியவர்கள் அழுதால்........அவர்களைப் படைத்த ஆண்டவன் வருகிருனு? நெருப்புக்கும் நெகிழாத கல், அழுகைக்கு இளகுமா?

ஞானம்—அவரது அருமை மனைவி—பன்னிரண்டு வருடங்கள் இன்பத்திலும், துன்பத்திலும் துணையாக இருந்து இணைந்து வாழ்ந்த விளக்கு—பிள்ளை பெறும் நேரத்தில் அணைந்துவிட்டது—பிணமாகி விட்டது.

"பாரிஸ்டர்! அழாதீர்கள்! இன்னெரு விஷயம் சொல்லப் போகிறேன். மனதைத் திடப்படுத்துங்கள்."

"இன்னெரு விஷயமா? பிறந்த குழந்தையும் இறந்துவிட்டதா?"

"இல்லை.....ஒருவேளை.....ஊமையாக இருக்கலாம்."

## ஊ மை

ஆம் நான் ஊமைதான். அது என் குற்றமா? நான் முன் ஜென்மத்தில் செய்த பாவந்தான் என்னை ஊமையாகப் பிறக்கவைத்து விட்டதாம்!

....ம்! படித்த முட்டாள்கள்! போன ஜென்மத்தை எந்தக் கண்ணாடி வைத்துப் பார்த்தார்கள், இந்தக் குருடர்கள்? செத்தவர்கள் மீண்டும் மனிதர்களாக பிறக்கிறார்களா? முடியுமா?

உடைந்த சங்கு ஒன்றாகுமா? கறந்தபால் இருந்த இடத்திற்கே செல்லுமா? இது முடிந்தால்தானே சென்ற உயிர் மீண்டு வரமுடியும்! இதை அறியாத அப்பாவிகள்தான் என்னை 'பாவி' என்றார்கள்.

பிறந்த உடனேயே என் தாயைத் தின்றுவிட்டேனாம்! என்ன அக்கிரமம்! இதையும் உலகம் நம்புகிறது. இன்னும் பல்கூட முளைக்காத நானா என் தாயைத் தின்றிருப்பேன்? இதிலே எவ்வளவு அபத்தம்! வேண்டுமானால் நான் என் தாயை விழுங்கிவிட்டதாகச் சொல்லட்டும்—அப்படி என்றாலுங்கூட பேய், தாயை விழுங்கும் பழக்கம் மனிதர்களிடம் கிடையாதே! நாயும் பூனையுந்தான் பெற்ற குட்டியில் ஒன்றைத் தின்று விடும் என்று சொல்வார்கள்.

ம்! இதெல்லாம் கால வித்தியாசம்! நான் பிண மாகப் பிறந்திருந்தால் ...? அல்லது நான் பிறந்த உடனேயே இறந்திருந்தால்.......? இந்த அபச்சொல் வருமா? தண்ணீரில் இருந்து கீழே விழுந்த மீன் சும்மா சாகுமா? துள்ளித் துள்ளித்தானே சாகும்! அப்படி இருக்க, துன்பத்தோடு துவண்டு துடிதுடிக்காமல், நான் மடிய முடியுமா?

எனக்குப் பிரேமா என்று பெயரிட்டார்கள். தாயில்லாத பிள்ளைகள் எல்லாம், செத்தா போகின் றன? நான் சாகவே இல்லை.

ஆனல்—கோர்ட்டே சதம் என்று இருக்கும் பாரிஸ் டரால் என்னை வளர்க்க முடியுமா? என் சிற்றன்னை உத்தமிக்கு ஒரு பெண். ஆம் எனக்கு ஒரு தங்கை பிறந்தது. அவளுக்கு பெயர் ரதி. நானும் ரதியும் போட்டிபோட்டு வளர்ந்து வந்தோம். ரதி எந்த ஊன மும் இன்றி அழகு ராணியாக இருந்தாள்.

ரதி பிறந்தாளோ இல்லையோ, என் அப்பாவுக்கு பப்ளிக் பிராசிகூட்டர் வேலை கிடைத்தது. இதனல் தானே என்னவோ என். தந்தைக்கு அவளிடத்திலே அலாதி பிரியம் இருந்தது.

ஆண்களிலே அனேகர் என்ன காரணத்தினலோ இரண்டாந்தாரம் உருட்டிவிட்டால் ஆடுகின்ற 'தஞ்சா வூர் மண் பொம்மை'யாக மாறிவிடுகிறார்கள்! இதில் என் தந்தையும் ஒரு அங்கத்தினர்.

உத்தமி 'உட்கார்', என்றால் உட்காருவார். 'உஸ்'

*என்றால் 'புஸ்' என்றுகூட மூச்சு விடமாட்டார் என் தந்தை. என் தந்தை கோர்ட்டில்தான் வழக்காடலாம்; வீட்டிலே முடியுமா? அதிலும் நீதிபதியாக என் சிற்றன்னை உத்தமி இருக்கும்போது? பப்ளிக் பிராசிக்கூட்டராக இருக்கும் பாரிஸ்டர் பார்த்தசாரதி, வீட்டிலே கைதியாக இருந்தார்.*

'ஆளைக் கண்டு மயங்காதே' என்று ஒரு பழமொழி உண்டு. அதேபோல்தான் பெயரைக் கொண்டு எதையும் தீர்மானிக்க முடியாது. விஷப் பாம்புக்குப் பெயர் நல்ல பாம்பு! குருடனுக்குப் பெயர் கண்ணாயிரம்! ஊமைக்குப் பெயர் தேன் மொழியாள்! அக்கிரமக்காரிக்குப் பெயர் உத்தமி!

என்னை ஊமைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டும் என்று என் தந்தை முயற்சித்தார். ஆனால் உத்தமியின் உத்தரவு......பிரபுவின் மகளாயிருந்தும் பிறந்த வீட்டிலேயே நான் பிச்சைக்காரியானேன்; உத்தமிக்கு உழைக்கும் வேலைக்காரியானேன்.

ஆனால்—ரதி?

அவளைப்பற்றி நான் ஏன் பொறாமைப்பட வேண்டும்? அவள் நன்றாக வாழட்டும். கந்தல் துணியை நான் கட்டும்போது அவள் பட்டும் பீதாம்பரமும் உடுத்தட்டும்! காதிலோ, கழுத்திலோ, மூக்கிலோ எதுவும் இல்லாமல் நான் 'மூளி'யாக இருக்கும்போது வைர நகைகள் ரதி உடம்பிலே ஜொலிக்கட்டும்! தலைக்கு எண்ணெய்கூட இல்லாமல் 'பரட்டை'யாக

நான் காட்சிஅளிக்கும்போது....பிரைல்கிரீம் தேய்த்து, பின்னல் ஜடை போட்டு, பட்டு ரிப்பன் மாட்டும் பவிசுக்காரியாக ரதி இருக்கட்டும்! உழைக்க நானும் உல்லாசத்துக்கு அவளும் இருக்கட்டும்!

ஆனல்—

ரதியும் தாயைப் போலவா இருக்க வேண்டும்?

## ரதி

பின் எப்படி இருப்பது? நூலைப்போல சேலை! தாயைப்போல பிள்ளை! உத்தமியின் மகள் நான்! என் தாயா கொடுமைக்காரி? ஊமை பிரேமாவை வளர்க்க என் தாய் பட்ட கஷ்டம் கொஞ்சமா?

ஊமைக் கழுதைக்கு படிப்பு எதற்கு? படாடோபம் எதற்கு? இந்த ஊமையை கட்டிக்கொள்ள எந்த மன்மதன் வரப்போகிறன்? ஜோடனை இல்லாவிட்டால் என்ன கெட்டுப்போகும்? பதினைந்து வருடமாகப் பாலும் பழமும் கொடுத்து வளர்க்காவிட்டாலும், பழையது போட்டு வளர்க்கவில்லையா? ம்! நன்றி கெட்ட ஜென்மம்!

இப்படிப்பட்டவளைக் கொல்ல வேண்டும்! இதை அறிந்த கடவுள் அவளைக் காய்ச்சலில் கஷ்டப்படும்படி வைத்தார். சாதாரண காய்ச்சலல்ல, 'டைபாய்டு' காய்ச்சல். கொல்லைப்புறத்திலே ஒரு கட்டில் போட்டு

பிரேமாவைக் கிடத்தினோம். என் தந்தை வீட்டுக் குள்ளேயே இருக்கட்டும் என்று கெஞ்சினார். தொத்து வியாதிக்காரியை வீட்டுக்குள்ளே வைப்பதா? நானும் என் அம்மாவும் மறுத்துவிட்டோம்.

அன்று மாலை நான் கொல்லைப்புறம் சென்றேன். என்னைப் பார்த்து 'திரு திரு' என்று விழித்தாள்.

"தாகமா இருக்கு. கொஞ்சம் தண்ணீர் கொடு"

இப்படி ஜாடை செய்து என்னிடம் பிரேமா கேட்டாள். நான் என்ன அவள் வேலைக்காரியா? அதை லட்சியம் செய்யாமலே வந்துவிட்டேன்.

பிரேமா பெரிய கள்ளியா யிருக்கவேண்டும்! நான் வந்ததற்கப்புறம் சிரமப்படுவதுபோல் பாவனைசெய்து எழுந்தாள். என் தந்தை அந்தப் பக்கம் வந்ததை அவள் பார்த்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் படாரென்று கீழே விழுவாளா?

அந்த பசப்புக்காரியை ஓடிப்போய் என் தந்தை தூக்கினார்; கட்டிலிலே அவளைக் கிடத்திவிட்டு டாக்டரைக் கூப்பிடப் போகிறேன் என்றார். ஏமாற்றுக் காரிக்கா டாக்டர்? நானும் என் தாயும் என் தந்தையைத் தடுத்தோம்.

ஆண்களே பச்சோந்திகள் என்றுதான் நினைக்கிறேன். என் தாய்க்கு அடங்கி ஒடுங்கியிருந்த என் தந்தை......எங்களை உதறித் தள்ளிவிட்டு டாக்டரைக் கூப்பிட 'போன்' இருந்த அறைக்கு ஓடினார். ஆனால்

நான் தந்திரமாக 'போன்' வயரை அறுத்துவிட்டேன். அப்படி இருந்தும் என் தந்தை டாக்டரைக் கூப்பிடப் போய்விட்டார்.

எனக்கு ஒரே கோபம். இந்த வீட்டில் ஊமைக்கு இவ்வளவு மதிப்பா? ஊமை படுத்திருந்த கட்டிலைக் கவிழ்த்துவிட்டேன்.

"டாக்டர் வருவதைப் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே என் தாய் முன்வாசலிலே போய் நின்றாள்.

சற்று நேரத்திலே ஒரு கார் எங்கள் பங்களாவிற்குள் நுழைந்தது. ஒரு வாலிபர் காரைவிட்டு இறங்கி வந்தார். என் தாய் வழிவிடவே இல்லை. கோபமாகவே நின்றாள்.

"நீங்கள்தான் டாக்டரா?"

"இல்லை. வக்கீல் ரத்தினம்."

"யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? நீங்கள் டாக்டர்தான்."

இப்படி பேச்சுக் குரல் கேட்டு நான் வெளியே வந்தேன். சூட்டும் கோட்டும் போட்ட அந்த அழகான வாலிபரின் கண்களும் என் கண்களும் சந்தித்தன.

"அம்மா! இவர் டாக்டரில்லை. அப்பாவைப் பார்க்க வந்திருக்கிறார். வழிவிடு."

என் தாயும் நானும் அவரை அழைத்துக்கொண்டு ஹாலுக்குப் போனோம். அவரை சோபாவிலே

உட்காரச்சொன்னேன். அவரோடு பேசிக்கொண்டே இருக்க பேரின்பமாக இருந்தது. பேசிக் கொண்டு தான் இருந்தேன்.

அப்போது படார் என்ற சப்தம் கேட்டது.

திடுக்கிட்ட நான் சப்தம் வந்த கொல்லைப் புறத்திற்கு ஓடினேன். கட்டிலில் பிரேமாவைக் காணவில்லை. ஒரு நாற்காலி சாய்ந்து கீழே கிடந்தது. அது சாய்ந்த சப்தம்தான் அப்படி கேட்டிருக்கிறது. பிரேமா எங்கே?

ஆ!......ஐயோ!

மேலே கயிற்றிலே தொங்கிக் கொண்டிருந்தாள். பிரேமா!

"ஐயோ! அம்மா! ஓடியா! ஓடியா!"

இப்படி நான் அலறினேன்.

## வக்கீல் ரத்தினம்

நான்தான் ஓடிப்போய் கயிற்றை அறுத்துவிட்டேன்; நல்லவேளை அப்போதுதான் பாரிஸ்டர் டாக்டரோடு வந்து சேர்ந்தார். டாக்டர் மட்டும் வராதிருந்தால்....பிரேமா பிணந்தான்.

என்ன இருந்தாலும் பாவம் ஊமையை இப்படியா கொடுமைப் படுத்துவது?

ரதியாம் ரதி! அழகுள்ள அரவம் என்னைக் காத லிக்கிருளாம்! இவளை எவன்தான் கட்டி மாரடிக்க முடியும்? சம்பாதிக்கும் பணமெல்லாம் பவுடருக்கும் ஸ்னேவுக்கும் சரியாய்ப் போகும்!

ஆனல்—எனக்கென்னவோ பிரேமாவிடத்திலே ஒருவித பரிவு ஏற்பட்டது. அமெரிக்காவிலே இருந்து ஒரு டாக்டர் சென்னைக்கு வந்திருப்பது எனக்குத் தெரியும். இதை பாரிஸ்டரிடத்திலே சொன்னேன். பிரேமாவை அந்த டாக்டரிடத்திலே காண்பிக்க வேண்டும் என்று பாரிஸ்டருக்கு ஆசைதான்.

ஆனல்.......

உத்தமி அனுமதிக்க வேண்டாமா? அதற்கு நான் ஒரு உபாயம் செய்தேன். ரதியிடத்தில் அன் பொழுகப் பேசி நடித்தேன். அப்புறம் ரதியே உத் தமியை சரிக்கட்டி விட்டாள். எல்லோரும் சென்னைக் குப் புறப்பட்டோம்.

சென்னையில் என் அண்ண தேவராஜ் மாஜிஸ்ட் ரேட்டாக இருந்தார்; அங்குதான் போய் இறங்கினேம்.

பிரேமாவை அந்த டாக்டரிடம் அழைத்துச் சென் ரேம்; ஆனல் அவர் கைவிட்டு விட்டார்; பின்னர் பல டாக்டர்களிடம் காண்பித்து பார்த்தோம். பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை.

சென்னையில் பத்து நாட்கள் தங்கினேம். ரதி புதுச் சிநேகிதம் ஒன்று பிடித்துவிட்டாள். அது

வேறு யாருமில்லை. என் அண்ணு தேவராஜ்தான். என் அண்ணுவும் ரதியும் ஒரே குஷியாக எங்கெங்கோ சென்றூர்கள். அதனல் எனக்கென்ன? நான்தான் ரதியைக் காதலிக்கவில்லையே!

ஊர் வந்து சேர்ந்ததும் என் உறவு அற்றுப் போகவில்லை. தினமும் பிரேமாவைக் கவனித்து வந்தேன்.

நானும் பாரிஸ்டரும் முன்பு கோர்ட் நண்பர்களாக இருந்தோம்; இப்போது வீட்டு நண்பர்களாக மாறினேம்.

நான் அடிக்கடி பாரிஸ்டர் வீட்டுக்குப் போவதை உத்தமியும் ரதியும் நினைத்திருந்தால்....தடுத்திருக்க முடியும். ஆனல்-நான் அவர்கள் போக்குப்படியே பேசப் பழகிக் கொண்டேன்.

வக்கீலுக்கு இதுகூடத் தெரியாதா?

என் அண்ணுவைப்பற்றி வானளாவப் புகழ்ந்தால் ....ரதிக்கு ஒரே மகிழ்ச்சியாய் இருக்கும்.

என் அண்ணுவின் காதலும் ரதியின் காதலும் பலமாக வளர்ந்து வந்தது. எதிலே போய் முடியுமோ?

யார் எக்கேடு கெட்டாலும் சரி பிரேமாவுக்கு மாத்திரம் எந்தத் தொந்தரவும் இருக்கக் கூடாது.

## மைனர்

*தொந்தரவு இல்லாமல் இருக்குமா? அன்று ரயில்வே ஸ்டேஷனில்தான், நான் அவளைப் பார்த்தேன்.*

அவள் பெயரென்ன விலாசம் என்ன? என்று கூட இருந்தவனைக் கேட்டேன்.

*"ரதி"*......என்றான்........

*"அவளில்லையடா முட்டாள்."*

*"ஓ... அவளா? ஊமைப் பெண்ணப்பா!"*

*"ஊமையா?....அடடா! மூளையில்லாத கடவுள்! எந்த நாட்டில் ஊமைகள் இருந்தாலும் தேனினும் இனிய செந்தமிழ் நாட்டிலே ஊமைகளைப் படைக்கலாமா?"*

"போயும் போயும் இவள் மீதா ஆசை வைத்தாய்! *அழகில்லாத அவலட்சணமாச்சே?"*

*நிறுக்கத் தெரியாதவர்கள்! அளக்கத் தெரியாத*வர்கள்! கணக்கிடத் தெரியாதவர்கள்—கபோதிகள்!

*முகம் பார்க்கும் கண்ணாடிகளிலே பலவகை உண்டு. ஒரே உருவத்தை உள்ளபடியே காட்டும் ஒன்று! இன்னொன்று நீட்டலாக காட்டும்? மற்றொன்று குறுகலாகக் காட்டும்! மனிதர்களுக்கும் இப்படி பலவகை கண்கள் இண்டு. உள்ள அழகை உள்ளபடியே கண்டு கொள்ளும் சக்தி எல்லாக் கண்*களுக்கும் இருப்பதில்லை.

பிரேமா எனக்குப் பேரழகியாகக் காட்சி யளித்தாள். பிரேமாவைக் கண்டது முதல்.......எனக்கு ஊணுறக்கம் ஏது?

என் காதலி காமாட்சி கூட கேட்டாள்....? "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?"...என்று.

"பிரேமாவைக் கண்டது முதல்...." என்று நான் சொல்ல முடியுமா?

அப்படிச் சொன்னால்....காமாட்சி என்னை அடியோடு வெறுத்துவிடுவாள். அப்புறம் என் செலவுக்குப் பணமே கிடைக்காது. அதனால் நான் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை.

ஆனால்—பிரேமாவை அடைவது எப்படி? தினசரி சந்திக்கலாம் என்றாலோ........வெளியே வராத கூண்டுக் கிளி! காதலிக்கலாம் என்றாலோ....உணர்வற்ற ஊமை! நான் என்ன செய்வது?

என் அதிர்ஷ்டம் என்றுதான் நினைக்கிறேன்; வேலைக்கார சொக்கனை நண்பனாக்கினேன், பணத்தின் துணை கொண்டு.

என் திட்டத்தை அவனிடம் சொன்னேன்; அவன் பதறினான்; ஆனால்—பணத்தைக் கண்டதும்.... பக்குவமான வழி வகுத்துக் கொடுத்தான்.

அன்று பாரிஸ்டர் வீட்டில் யாருமில்லை. பிரேமா தான் பின்புறத்திலே வேலை செய்துகொண்டிருந்தாள்; சொக்கன் என்னை உள்ளே போகச் சொல்லி விட்டான்.

*பிரேமா என்னைக் கண்டதும் ஆச்சரியமாகப் பார்த்தாள்; வேலையில் அவளுக்குக் கொஞ்சம் உதவி செய்தேன். விநாடிக்கு விநாடி விஷம்போல் ஏறியது வெறி!*

*"அப்புறம்?"*

**ஊமை**

*அப்புறம் என்ன? அந்தப் பாவி என்னைக் கெடுத்து விட்டான். இதை யாரிடம் சொல்வேன்? எப்படிச் சொல்வேன்?*

*எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நாட்கள் நகர நகர என் உடலிலே மாறுதல்......ஆம், என் வயிறு பெரிதாகிக் கொண்டே வந்தது.*

*என்ன செய்வது?*

*"அப்பா! ஒரு பாவி வந்து என்னைப் பலவந்தமாகக் கெடுத்துவிட்டான் என்று சொல்ல ஊமையால் முடியுமா?*

*எழுதிக் காட்டலாம் என்றால் நான் படிக்கவில்லையே!*

*இப்படி நான் கலங்கித் தவிக்கும் போதுதான்..... என் தங்கை ரதிக்கும் தேவராஜுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆக இருந்தது. தேவராஜ் எங்கள் பங்களாவுக்கு வந்திருந்தார்.*

*என் ரகசியம் வெளிப்பட்டு விடக் கூடாதே என்பதற்காக நான் ஒதுங்கியே இருந்து வந்தேன்.*

ஆனல்—

இதை என் சிற்றன்னை கண்டு கொண்டாள். வெறும் வாயை மெல்லும் என் சிற்றன்னைக்கு இந்த விஷயம் தெரிந்தால் சும்மா இருப்பாளா? என் தந்தையிடம் உடனே சொல்லிவிட்டாள்.

"விபசாரி!......மானங் கெட்டவளே! குடியைக் கெடுத்தவளே!"

இப்படி என்னை மட்டுமா திட்டினர்? இல்லவே இல்லை.

"அடே ரத்தினம்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவனே!"

பாவம்! நிரபராதியான ரத்தினத்தின் மீது பழியைப் போட்டார்கள். தேவராஜனும் சும்மா இருக்கவில்லை.

"கண் கெட்ட கபோதியே! நீ என் தம்பி அல்ல!"

இப்படி சொன்ன தேவராஜ், ரத்தினம் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

அந்த வேகத்திலே என்னையும் வெளியே பிடித்துத் தள்ளிக் கதவைச் சாத்தினர் என் தந்தை.

இனி எனக்கு ஆதரவு யார்?

ரத்தினம் எதற்கும் பயந்து விடவில்லை. என்னை அவர் வீட்டுக்கே அழைத்துச் சென்றார். எனக்கு எவ்வளவோ ஆறுதல் சொன்னர்.

எனக்கும் ரத்தினத்திற்கு மட்டுமல்ல இந்த கதி. அஜாக்கிரதையாக இருந்த குற்றத்திற்காக வேலைக்கார சொக்கனையும் வீட்டுக்கு அனுப்பி விட்டாராம் என் தந்தை.

சொக்கன் மீது பச்சாதாபம் கொண்ட ரத்தினம், அவனையும் தன் வீட்டில் வேலைக்கு சேர்த்துக் கொண்டார்.

## மைனர்

இவனை ஏன் வேலைக்குச் சேர்த்துக் கொண்டான்? முட்டாள்! எனக்கு உடந்தையாக இருந்தவன் இவன்தானே!

என்ன இருந்தாலும் சொக்கன் சுத்த மோசம். முதலில் என்னிடம் முந்நூறு ரூபாய் பெற்றுக் கொண்டான்; அப்புறம் அதுக்கு இதுக்கு என்று சொல்லி, என்னை மிரட்டி ஆயிரம் ரூபாய் வரை வாங்கி விட்டான். இப்படியே நான் எத்தனை நாளைக்குக் கொடுத்துக் கொண்டிருப்பது?

பாரிஸ்டர், வீட்டை விட்டுத் துரத்தியதும் எங்காவது தொலைந்து விடுவான் என்று நினைத்தேன். ஆனால், மீண்டும் மீண்டும் தொல்லை தர வந்து விட்டான்.

நேற்றுக்கூட என்னிடம் வந்து..........“ நூறு ரூபாய் அவசரமாகத் தேவை” என்று அதிகாரமாகச் சொன்னான். இதை இப்படியே விட்டுக் கொண்டிருப்பதா?

ம்! இருக்கட்டும்.

பிரேமா அழகான ஆண் குழந்தைக்குத் தாயா னுள். ரத்தினத்துக்கும் பிரேமாவுக்கும் பிறந்த பிள்ளை என்று ஊரார் கூறினர்!

வைத்தியக்காரர்கள்!

ரத்தினமும் துணிச்சல்காரன்தான். ஊராரின் எதிர்ப்பை அவன் லட்சியம் செய்யவில்லை. அவன் அண்ணன் தேவராஜ்—ரதி கல்யாணத்திற்குக் கூட அவன் வரவில்லை.

பாரிஸ்டர் குடும்பத்திற்கும் ரத்தினத்திற்கும், கீரியும் பாம்பும் போன்ற பகை ஏற்பட்டிருந்தது.

இதற்கெல்லாம் காரணம் நான்தான்! இது யாருக்குத் தெரியப் போகிறது? அந்த சொக்க னுக்குத்தான் தெரியும். அவனும் செத்துவிட்டால்....?

அன்று என் காதலி காமாட்சியோடு கடைத் தெருவுக்குப் போயிருந்தேன்; சாமான்கள் எல்லாம் வாங்கி விட்டு, வீட்டை நோக்கி வந்து கொண் டிருந்தோம்.

அப்போது எதிரே, ரத்தினம் சொக்கன் கூடவர, பிரேமா கையிலே குழந்தையுடன் வந்து கொண் டிருந்தாள். ஓடிவிடலாம் என்றாலோ.... ..காமாட்சி சந்தேகப்படுவாள்.

பிரேமா பார்த்து விட்டால்.......?

இதை நான் நினைத்துப் பார்ப்பதற்குமுன், பிரேமா என்னைக் கண்டு விட்டாள்; கண்டதும் கல்லைப் போல் ஸ்தம்பித்து நின்றாள்; கையில் இருந்த

குழந்தை கீழே விழுந்தது, கை நழுவி. பிரேமா மயங்கி விழுந்தாள். சுற்றிலும் கூட்டம் கூடியது. நான் அங்கு நிற்கவில்லை.

என் நிலைமையும் சரியில்லை. நான்தான் பிரேமாவைக் கெடுத்தேன் என்று ரத்தினம் உணர்ந்தால் ......? அல்லது சொக்கன் சொல்லிவிட்டால்...? ஜெயிலுக்குப் போக வேண்டியதா யிருக்குமே!

இதைத் தடுக்க வேறு வழியில்லையா?

" ஏன் இல்லை? நான் இருக்கிறேன் "

இப்படி சொல்லிக்கொண்டே சொக்கன் வந்தான்....ஆயிரம் ரூபாய் அவசரமாகத் தேவை என்றான்.

"கொடுக்காவிட்டால்........?"

விஷயத்தை வெளிப்படுத்தி விடுவான்! இப்படி எத்தனை நாளைக்குப் பயந்து கொண்டிருப்பது?

ஒரு முடிவுக்கு வந்தேன். என் காதலி, காமாட்சி வெளியே போயிருந்த நேரம்—சொக்கனை அழைத்தேன்; வீட்டுக்கு வந்திருந்தான்........

"சொக்கா புதுத்திட்டம்...."

"என்ன?"

" பிரேமாவையும் அவள் குழந்தையையும்.......!"

" ஆ! கொலையா?"

"ஆம்! அப்போதுதான்........அமைதி!"

"பத்தாயிரம் கொடுப்பாயா?"

"பதினைந்தாயிரம் தருகிறேன்"

"அட்வான்ஸ்"

"இதோ ஆயிரம்!"

## பத்திரிகைச் செய்தி

### கோரக் கொலைகள்

### வக்கீல் ரத்தினம் வீட்டில் பிணங்கள்

நேற்று இரவு வக்கீல் ரத்தினம் வீட்டிலே நான்கு கொலைகள் நடந்திருக்கின்றன. பாரிஸ்டர் பார்த்தசாரதி மகள் பிரேமா என்ற ஊமைப் பெண்ணும், அவளுக்கும் வக்கீல் ரத்தினத்திற்கும் பிறந்ததாகக் கருதப்படுகிற ஆண் குழந்தையும், கழுத்து திருகப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அதே வீட்டில் வேலை செய்த சொக்கனும் (முன்பு பாரிஸ்டர் வீட்டில் வேலைக்கிருந்தவனும்) பிரபல மைனரும் கத்தியால் குத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொலைகள் நடந்த தினத்தன்று வக்கீல் ரத்தினம், தான் ஊரில் இல்லை என்று சொல்கிறாராம். சந்தேகத்தின் பேரில் வக்கீல் ரத்தினத்தையே போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

ந-வி-பி-த

(பின் வந்த செய்தி)

பிரேத விசாரணைக்குப் பின், பிணங்கள் பரிசோதிக்கப்பட்டு, தற்கொலை அல்ல என்று தீர்மானிக்கப்பட்டு, பிணங்கள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டன. பிணங்களுக்கு உரிமை கொண்டாடி எவரும் வராததால், ஆஸ்பத்திரி சவக்கிடங்கிலேயே பிணங்கள் புதைக்கப்பட்டன.

ந-வி-நி-த.

**கோர்ட்டில் கொலை வழக்கு!**
**வக்கீல் ரத்தினமே குற்றவாளி!!**
**பாரிஸ்டர் வாதம்!!!**

வக்கீல் ரத்தினம் வீட்டுக் கொலை வழக்கை விசாரிக்க இடைவேளைக்குப் பின் மீண்டும் கோர்ட்டு கூடியது. (கொலை செய்யப்பட்ட பிரேமாவின் தந்தை) பாரிஸ்டர் பார்த்தசாரதியே சர்க்கார் தரப்பில் வாதாடினார். அவர் பேச்சு கார சாரமாக இருந்தது. ஆவேசம் வந்தவரைப் போல் கத்தினார்.

சர்க்கார் தரப்பில் பாரிஸ்டர் பேசியதாவது :—

"கொலை செய்யப்பட்ட பிரேமாவுக்கும் எதிரி ரத்தினத்திற்கும் ஏற்கனவே தொடர்பு உண்டு. இது ஊர் அறிந்த விஷயம். எதிரி இதை மறுக்கவில்லை. மாறாக கொலை செய்யப்பட்ட பெண்ணுடன் குடித்தனம் நடத்தினார். கல்யாணமாகாமலே குழந்தை

பெற்று சமூகத்தையும் சட்டத்தையும் மதியாமல் வாழ்க்கை நடத்தினர். துரோகிக்குத் துரோகம்.

கொலை செய்யப்பட்ட பெண்ணைக் கெடுத்து, ஒரு கௌரவமான குடும்பத்துக்கு எதிரி ரத்தினம் முதலிலே துரோகம் செய்தார். அப்புறம் இறந்த பெண்ணே எதிரிக்குத் துரோகம் செய்துவிட்டாள்.

இறந்துபோன பிரேமாவுக்கும் மைனருக்கும் கள்ள நட்பு இருந்திருக்கவேண்டும். இதற்கு சொக்கன் உடந்தையாக இருந்திருக்க வேண்டும். இந்த துரோகத்தை அறிந்த எதிரி, பிரேமாவையும் குழந்தையையும் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டு, சொக்கனையும் மைனரையும் கத்தியால் குத்திக் கொன்றிருக்கின்றார்.

இந்தக் கொலைக் குற்றங்களில் இருந்து தப்ப நினைத்த எதிரி சரியான வேஷம் போட்டிருக்கிறார். எதிரி ஒரு வக்கீலல்லவா? தான் ஊரில் இல்லாதது போல் நடித்துவிட்டால் தப்பி விடலாம் என்று நினைத்திருக்கிறார்.

மை லார்டு! இத்தகைய எதிரிகளை அணு அணுவாக சித்திரவதை செய்யவேண்டும். மோசடி! பலாத்காரம்! கொலை! ஒரு கொலையல்ல, நான்கு கொலைகள்! நான்கு கொலைகள்!"

இந்த சமயம் பாரிஸ்டர் பார்த்தசாரதி மயங்கிக் கீழே விழுந்தார். கோர்ட்டிலே ஒரே பரபரப்பு ஏற்பட்டது.

## பின்வந்த செய்தி!

*டாக்டர்கள் பார்த்தசாரதியைப் பரிசோதித்தனர். மாரடைப்பால் மாண்டுவிட்டதாகக் கூறினர். பாரிஸ்டருக்கு மரியாதை செலுத்த கோர்ட் நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.*

*(தந்திச் செய்தி)*

### கோரமான கார் விபத்து!
### பாரிஸ்டர் குடும்பமே பலி!

*பாரிஸ்டர் பார்த்தசாரதி இறந்த செய்தி கேட்டு, சவ அடக்கத்திற்காக காரில் வந்து கொண்டிருந்த அவரது மனைவி உத்தமி, மகள் ரதி, மருமகன் தேவராஜ் (மாஜிஸ்ட்ரேட்) கார் டிரைவர் உள்பட விபத்துக்குள்ளாகி மாண்டனர். எதிரே வந்த ஒரு லாரியின் மீது கார் மோதி, சின்னா பின்னமாகி கவிழ்ந்ததே விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.*

*ந-நி.*

### வக்கீல் ரத்தினம் வழக்கு
### நீதிபதியின் தீர்ப்பு

*லஞ்சுக்குப் பின்னர் மீண்டும் கோர்ட் கூடியது. நீதிபதி ஆசனத்தில் வந்து அமர்ந்ததும் நிசப்தம் நிலவியது. நீதிபதி தீர்ப்பைப் படித்தார்.*

"இந்த வழக்கில் எதிரி எதுவுமே பேச மறுக்கிருர். தான் குற்றம் செய்ததாகவோ இல்லை என்ருே அவர் சொல்லவில்லை. எதிரிதான் கொலை செய்தார் என்பதற்கு கண்ணுல் கண்ட சாட்சியம் எதுவும் இல்லை. ஜூரர்கள் எதிரிதான் கொலை செய்திருக்க வேண்டும் என்று ஏகோபித்து சொல்லி விட்டார்கள். நானும் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கிறேன்."

தீர்ப்பை வாசித்து முடித்ததும் நீதிபதி எழுந்து போய் விட்டார். வக்கீல் ரத்தினத்தை கையில் விலங்கு பூட்டி போலீசார் அழைத்துச் சென்றனர். வக்கீல் ரத்தினம் தீர்ப்பைக் கேட்டதும் புன்சிரிப்புடன் எல்லோரையும் பார்த்தார்.

ந-ஙி.

## முடிவுரை

வக்கீல் ரத்தினத்திற்குத் தூக்குத்தண்டனை என்று ஏற்பட்டதும் ஊரே சந்தோஷப்பட்டது. ரத்தினத் திற்காக யாரும் கவலைப்படவில்லை.

ஆனல்—காமாட்சி?

கண்ணீர் விட்டாள்; அழுதாள்; புலம்பினுள்! ஐயோ! நிரபராதியான ரத்தினத்திற்கா தூக்குத் தண்டனை?

வக்கீல் ரத்தினத்திற்காக் மைனரின் காதலி காமாட்சி ஏன் கண்ணீர் விட வேண்டும்?

அன்று இரவு பன்னிரண்டு மணி இருக்கும். காமாட்சி வீட்டில் இருந்து கரும் புகை முட்டிக் கொண்டு வந்தது.

"தீ! தீ!"

அந்தத் தெரு வாசிகள் கூக்குரலிட்டனர்.

காரைவீட்டிலா தீப்பிடிக்கும்? தீ பிடிப்பதாய் இருந்தால் மேலும் மேலும் புகை வந்திருக்க வேண்டும்! தீயின் ஜுவாலை தெரிந்திருக்க வேண்டுமே! அதெல்லாம் ஒன்றுமில்லை. புகை வருவதும் நின்று விட்டது.

ஆனல்?

ஒரே வாடை! பிண வாடை!

அந்தத் தெருவிலே எல்லோரும் மூக்கைப் பிடித்துக்கொண்டு நின்றனர்கள்.

கடும் வேகத்தில் நாலைந்து கார்கள் வந்தன. காமாட்சி வீட்டின் முன்னல் நின்றன.

போலீசார் காமாட்சி வீட்டை தட்டு தட்டென்று தட்டினர்கள்.

யாருமே கதவைத் திறக்கவில்லை. போலீசார் கதவை உடைத்தார்கள். கதவு உடைக்கப்பட்டதோ இல்லையோ....குப் என்று புகையும் பிணவாடையும் சேர்ந்து வந்தன.

போலீசார் உள்ளே சென்றனர். அடடா! என்ன கோரம்! சேலை எல்லாம் தீயில் வெந்து, உடம்பெல்லாம், கருகி, கருவாடாகக் கிடந்தாள் காமாட்சி.

பக்கத்திலே ஒரு மண்ணெண்ணெய் பாட்டில் கிடந்தது.

எண்ணெயை ஊற்றி தன்னைத் தானே எரித்துக் கொள்வதா! ....ம்! நவீன—தற்கொலை!

தற்கொலைக்குக் காரணம்?

போலீசார் தேடினர்; மேஜையிலே ஒரு கடிதம் இருந்தது.

தற்கொலைதான் செய்து கொண்டேன். அதற்கு காரணம் யாருமில்லை, என் காதலர் மைனர் போய் விட்டார்.

எப்படி போனார்? வக்கீல் ரத்தினமா கொலை செய்தார்? இல்லை! இல்லவே இல்லை!

நான்தான் கொலை செய்தேன்! என் காதலர் மைனரை நான்தான் கொலை செய்தேன்! ஏன் கொலை செய்தேன்?

தெரிந்து செய்தேனா?....ஆம்! தெரியாமல் செய்தேனா?...ஆம்! என்னைக் காதலித்த மைனர்....என் பணத்தாலேயே படாடோபமாக வாழ்ந்த மைனர்—எனக்குத் துரோகம் செய்யலாமா?

வேலைக்கார சொக்கனை சரிக்கட்டி ஊமை பிரேமாவைக் கெடுக்கலாமா?

ஆண்கள் வீட்டுக்கு வெளியே என்ன செய்தாலும் பெண்களாகிய எங்களுக்குத் தெரியாமல் போய்விடும் என்று நினைக்கிறார்கள்.

நானும் மைனரும் அன்று கடைத்தெருவுக்கு போய்விட்டு வந்தோம். வழியில்....அந்த பிரேமாவும் வக்கீல் ரத்தினமும் வந்தார்கள். அவர்களைக் கண்டதும்....மைனர் ஏன் அப்படிப் பதறினர்.?

என்னை ஏமாற்ற முடியுமா? அன்றிலிருந்து அவரை நுட்பமாக கவனித்தேன். வேலைக்கார சொக்கன் அடிக்கடி வந்து போனான். வந்த சமயமெல்லாம் நூறு நூறாக பணம் வாங்கிச் சென்றான்.

ஒரு நாள் நான் வெளியே போவதாக பாவனை செய்து வீட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண்டேன்.

வேலைக்கார சொக்கன் வந்தான். பிரேமாவையும் குழந்தையையும் கொன்றுவிட, சொக்கன் சம்மதித்து ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் வாங்கிச் சென்றான்.

" அடே, சொக்கா! அடிக்கடி பணம் பறிக்கும் பேயே! பிரேமாவையும் குழந்தையையும் நீ கொன்ற உடனே........உன்னை அங்கேயே கொன்று விடுகிறேன்"

இப்படி தனக்குள்ளே சொல்லிக் கொண்டு என் காதலர் மைனர் மீசையை முறுக்கிக் கொண்டார்.

மைனரைக் கொன்று விடுவோமா? காட்டிக் கொடுத்து விடுவோமா? என்ற ஆத்திரம் எனக்கு இருந்தது.

ஆனல்....

அவர் என் காதலர்!

கொலை நடக்கும் இடத்திற்கு என் காதலர் மைனரைப் பின் தொடர்ந்தேன்.

வக்கீல் ரத்தினம் வீடு. சொக்கன் முதலில் சென்ருன்; மைனர் பின் தொடர்ந்தார்.

ஒரே இருட்டு.

முதலில் குழந்தையின் 'வீச்' என்ற சப்தம்! அப்புறம் ஊமையின் அலறல்!

இந்த சமயந்தான். என் கண்கள் என்னை மோசம் செய்து விட்டன. என் காதலர் மைனரை வக்கீல் ரத்தினம் பிடித்துக் கொண்டது போல் தெரிந்தது. என் காதலரை காப்பாற்ற நான் கொண்டு சென்ற கத்தியால் ஓங்கிக் குத்தினேன். பதட்டத்தில் ஓடி வந்து விட்டேன்.

ஆனல்——

என் மைனரை நானே கத்தியால் குத்திவிட்டேன் என்பதை அறிந்தேன்.

பிரேமாவையும், குழந்தையையும் சொக்கன் கொல்ல—சொக்கனை மைனர் கொல்ல—மைனரை நான் கொன்று விட்டேன்.

பாவி நான். இனி நான் வாழலாமா? நிரபராதியான ரத்தினம் தண்டிக்கப்பட்டால் எனக்கென்ன?

என் காதலர் போய்விட்டார். இதோ.. நானும்...
காமாட்சி

இந்தக் கடிதத்தில் இருந்து போலீசார் ரத்தினம் நிரபராதி என்பதை உணர்ந்தனர்.

வக்கீல் ரத்தினத்தை விடுதலை செய்ய சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம், காமாட்சி கடிதத்தோடு அந்த இரவிலேயே ஓடினார்கள்.

"வக்கீல் ரத்தினத்தை விடுதலை செய்க"

இந்த உத்தரவோடு காலை 6-மணிக்கு ஜெயிலுக்குப் போலீசார் பறந்தனர்.

ஆனால்—

காலை ஐந்து மணிக்குத் தூக்கிலிடப்பட்ட ரத்தினத்தின் பிணத்தை ஜெயில் அதிகாரிகள் விடுதலை செய்தனர்.

# நான்கு பிணங்கள்

## அவன்

இது என் கதை மட்டுமல்ல, எங்கள் குடும்பக் கதை. எங்கள் என்றால் வேறு யாருமில்லை. என் சித்தப்பா வீட்டுக் கதையும் இதிலே சேர்ந்திருக்கிறது.

என் தந்தையும் சித்தப்பாவும் ஒற்றுமையின் அவதாரச் சின்னங்களாகவே இருந்தனர், என் தாத்தா பரலோகப் பயணம் போகும் வரை. அப்புறம் பாகப் பிரிவினையிலே பலத்த சண்டை. அந்தச் சண்டையின் விளைவு....நல்லதிற்கும் பொல்லதிற்கும் வந்து போகும் சாதாரண உறவுகூட அற்று விட்டது.

முன்னோருக்கு இருந்த வியாதி பின்னோருக்கும் வருமல்லவா? என் தந்தைகாலப் பகை, என் காலத்திலும் தொடர்ந்ததால்தான் என் தந்தை இறந்த போது என் சித்தப்பாவோ, அல்லது அவருடைய ஒரே மகன், ஆம் என் அண்ணன் இராமனோ, துக்கம் விசாரிக்க என் வீட்டுக்கு வரவே இல்லை.

ஒரு வேளை, பணம் ஒரு கூட்டத்தாருக்கு மட்டும் சொந்தமானதாய் இருக்கலாம். ஆனால் மானமும்

ரோசமும்? எப்போதும் எல்லோருக்கும் பொதுவானது. என் சிற்றன்னை இறந்தபோது நானும் என் தாயும் போகவே இல்லை. இப்படியே காலம் வளர வளர எங்கள் பகையும் வளர்ந்துகொண்டே வந்தது.

இந்த லட்சணத்திலே நான் பொதுஜன சேவையிலே ஈடுபட்டிருந்தேன்; சமூகத்தைச் சீர்திருத்தவும் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக உள்ள பிற்போக்குச் சக்திகளை முறியடிக்கவும் தீவிரமாக வேலை செய்தேன். வீட்டைச் சீர்திருத்த முடியாதவன் நாட்டைச் சீர்திருத்த முடியுமா? இப்படி என்னைக் கேட்டவர்கள், வீட்டுக்கும் நாட்டுக்குமல்ல, தனக்குத்தானே எதுவும் செய்ய இயலாத ஜம்பக்காரர்கள் என்று எனக்குத் தெரியும். கொசுவை அடிக்க முடிந்தவன் தான் கொடும் புலியைக் கொல்ல முடியும் என்று யாராவது சொல்ல வந்தால்.......அவர்களைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? அப்படித்தான் நான் நினைத்தேன்.

என்னிடத்திலும் ஒரு ஜம்பம் இருக்கத்தான் செய்தது. கல்யாணம் செய்த பின் காதலிப்பதா? அல்லது காதலித்த பின் கல்யாணம் செய்வதா? இந்தக் கேள்விகள் என் உள்ளத்திலே எழுந்தபோது நான் ஒரு சீர்திருத்த வாதியாகையால் காதலித்துத் தான் கல்யாணம் செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டினேன். ஆனால், அடைபட்டுக் கிடக்கும் பெண்கள் வாழும் இந்த நாட்டிலே காதல் மணம் சாத்தியமற்றது என்று எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் இப்படி ஜம்பச் சபதம் செய்யலாமா? இந்தக் கேள்விக்கு ஒரே பதில்தான், எல்லோரும் ஆற்றோடு

நீந்துவதில்லை, சிலர் எதிர் நீச்சலும் அடிக்கிறார்கள்! அந்த ரகத்தைச் சேர்ந்தவன்தான் நான்.

ஒரு நாள் நான் ஒரு ஊருக்குப் பிரசங்கம் செய்வதற்காக ரயிலில் சென்று கொண்டிருந்தேன்; என் எதிரே ஒரு யுவதியும் ஒரு அம்மாளும் உட்கார்ந்திருந்தார்கள். டிக்கெட் பரிசோதகர் வந்தபோது, அந்த அம்மாள், பணப்பையையே எங்கோ பறி கொடுத்து விட்டார்கள் என்பது தெரிய வந்தது. எடுத்த டிக்கெட்டும் இல்லை; மீண்டும் எடுக்க கையில் பணமும் இல்லை. என்ன செய்வது? அவர்கள் விழிப்பின் மொழியறிந்து நானே பணத்தைக் கட்டினேன். வரண்ட நிலத்தில் வாடி வதங்கி யிருக்கும் பயிருக்குத் தண்ணீர் பாய்ந்ததும் பயிர் தலை நிமிர்கிறதல்லவா? அதைப் போலவே அந்த யுவதி என்னை நிமிர்ந்து பார்த்தாள். காதல் என்பது இப்படித்தான் உதயமாகுமோ?

ஆம்! இன்பக் கதிர்களை பரப்பும் ஆதவன், அதி காலையிலே அடி வானத்திலே, தன்னை உலகுக்கு அறிமுகப் படுத்த, அந்த யுவதியைப் போலதான் எட்டிப் பார்க்கிறான். அப்போது ஆதவன் அழகின் பிம்பமாய் காட்சியளிப்பது போலத்தான் அந்த யுவதி பேரழகியாகத் தோற்றமளித்தாள். இடையிடையே மேகத்துட் புகுந்து ஜெகத்தோரை ஏமாற்றும் ஜெகச் சோதியனைப் போலத்தான், அந்தச் சுந்தரவதி என்னைப் பார்ப்பதும், குனிந்து கொள்வதுமாக என்னை ஏங்க வைத்தாள்.

கடவுளே இல்லையென்று நிரூபிக்கும் நாஸ்திகன் திடீரென்று ஒரு நாள் கடவுளை நேரிலே கண்டு விட்

டால்........அந்தக் காட்சியை அவன் உயிருள்ளவரை யிலும் மறக்க முடியுமா? அந்த யுவதி என்னை விட்டுப் பிரிந்தாளே தவிர, என் நெஞ்சத்தை விட்டு அகலவே இல்லை.

அப்புறம் அந்தச் சிங்காரியைச் சினிமாவிலே சந்தித்தேன். சினிமா படத்திலே காட்சிக்குக் காட்சி கதை வளருவதைப் போல் எங்கள் காதல் வளர்ந்து வந்தது.

முதன் முதலில் டிக்கெட்டுக்கு பணம் கொடுத்து மகத்தான உதவி செய்தேனல்லவா? அதற்கு நன்றி செலுத்தவோ என்னவோ, என்னை ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு அழைத்திருந்தார்கள். "அம்மா! கொஞ்சம் பழசு இருந்தா போடுங்கம்மா!" என்று கேட்கும் பிச்சைக்காரனைப் பார்த்து, "பழையது ஏனப்பா? பாயாசத்தோடு பச்சரிசிச் சாப்பாடே போடுகிறோம். உள்ளே வாப்பா!" என்று உள்ளன் போடு கூப்பிட்டால்......கும்பிடு போட்டுக் கூடவே செல்வானல்லவா? நானும் சென்றேன்.

சில வீடுகளிலே உள்ளே சென்றதும் "வருக! வருக" (Welcome) என்று எழுதப்பட்ட திரை தொங் கும். அந்த வீட்டிலே திரைக்குப் பதிலாக அந்தத் திருமேனியாளே புன்சிரிப்போடு நின்றாள். என் உள்ளம் பூரித்தது.

உள்ளே போய் உட்கார்ந்தேன். என் எதிரே இருந்த மேஜையில் ஐந்து புத்தகங்கள் இருந்தன. அவைகளைக் கையில் எடுத்தேன். அதிலே நான்கு

நான் எழுதியவை. என்னோடு—என் காதலியோடு—என் புத்தகங்கள்—அதிலுள்ள என் போட்டோக்கள்—ஆம்; நான் இருக்கிறேன். புத்தகத்தைப் புரட்டினேன்.

"இந்தக் கதை மிக நன்றாக இருக்குமே?"

"நீங்கள் எழுதியதை நீங்களே படிக்கலாமா! நல்லா இருக்கும்னு சொல்லலாமா?"

இப்படி அந்த யுவதி குத்தலாக என்னைக் கேட்டாள் சிரித்தபடி.

"ஏன்? தாம் பெற்ற பிள்ளையைத் தாமே பார்த்துப் பார்த்து ரசிப்பதில்லையா? நல்லவர்கள் என்று சொல்லி மகிழ்வதில்லையா!"

இந்தப் பதிலை நான் சொன்னதும் அவள் வெட்கத்தோடு தலை குனிந்து மீண்டும் பேச ஆரம்பித்தாள். "உங்க கதைகளில் மிகவும் பிடித்தமானது எது தெரியுமா?...."

அதற்குமேல் அவள் பேசவில்லை; வெட்கப்பட்டாள்: திடீரென்று கீழே குனிந்து மேஜையிலிருந்த புத்தகங்களில் ஒன்றை எடுத்து "இதுதான்" என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

அந்தப் புத்தகத்தின் பெயர்: "**நான் உன்னைக் காதலிக்கிறேன்.**"

பெண்களே புத்திசாலிகள்தான். எனக்கு முன்பெல்லாம் ஜாடைபேசும் பெண்களைக் கண்டால் சுத்தமாகப்பிடிக்காது. ஆனால், இப்போது? ஒரே மகிழ்ச்சி.

அந்தப் புத்தகத்தைப் புரட்டினேன். "சீதா" என்று எழுதப்பட்டிருந்தது. அவள் பெயர் சீதாவா? ஆம்; முதன்முதலில் உப்பரிகையில் சீதையைக் கண்டு இராமன் காதலித்ததுபோல் நான் சீதையை ரயிலில் கண்டு காதலித்தேன்.

இனி சுயம்வரம் எப்போது? கல்யாணம் எப்போது? ஆம்; என் கொள்கைப்படி ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டேன். இனி........? பெண் கேட்க என் தாயார் சென்றார்கள். "பையன் கெட்டிக்காரன்; செல்வாக்கான குடும்பம்; பணத்திற்குக் குறைவில்லை; நாங்கள் பெண் தருகிறோம். பெண்ணோடே அப்பா வெளியூர் போயிருக்கார். வந்ததும் பேசி முடிக்கலாம்" இந்த பதிலைக் கேட்டு நான் மட்டுமா, சீதாவும் சித்தம் மகிழ்ந்திருப்பாள்.

சீதாவின் தந்தை வர ஒருமாதம் ஆகும் என்று சொன்னார்கள். எனக்கும் சில வேலைகள் கொழும்பிலே இருந்தது. அதை முடிக்க நான் புறப்பட்டு விட்டேன். அவசர அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு 28 நாட்களில் திரும்பி வந்தேன்; வண்டியிலே என் வீட்டுக்கு வந்தேன். என் வீட்டுக்கு முன்னால் தெரு பூராவும் கல்யாணப் பந்தல் போடப்பட்டிருந்தது. எனக்கு ஒரே ஆச்சரியம். என்னைக் கேட்டுக் கொள்ளாமலே கல்யாண நாள் வைத்துவிட்டார்கள் என்று எண்ணியபடி வீட்டுக்குள் சென்றேன்.

"என்னம்மா வீட்டெதிரே பந்தல்?"

"ஒங்க சித்தப்பா மகன் இராமனுக்குக் கல்யாண மாம்!"

"அண்ணனுக்கா? பெண் யாரம்மா?"

"அதான்டா அந்த சீதா!"

என் நிலையை விளக்க நான் என்ன எழுதுவது? துரோகம் செய்துவிட்டார்கள்! இடையே நடந்த சூழ்ச்சிக்கு இரையாகி விட்டார்கள். என் சித்தப்பாவுக்கு-என் அண்ணன் இராமனுக்கு என் குடும்பத்தின் மீது என்னதான் கோபம் இருந்தாலும் இந்தக் கொடுமதி கூடாது. தன் அண்ணன் மகனுக்கு—தன் தம்பிக்கு நல்ல இடத்து சம்பந்தம் கிடைக்கிறது என்று சந்தோஷப்படுவதை விட்டு, சதி செய்துவிட்டார்கள் சண்டாளர்கள்.

நான் திட்டுவதால் அவர்கள் திருமணம் நின்று போகும்? மறுநாளே என் அண்ணன் இராமனுக்கும் சீதாவுக்கும் கல்யாணம் நடந்தேறியது. இனி என் கதி?

நடைப் பிணம்! பேசும் பிணம்! சாகா சடலம்! எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. என் மனதை வேறு எதிலாவது செலுத்த வேண்டும். அப்படித்தான் செய்தேன்; இருந்தாலும் வேதனை என்னைக் கொன்றது.

ஒரு நாள் இரவு இரண்டு மணி இருக்கும்; அப்போதும் நான் தூங்கவில்லை; 'மகிழ்ச்சி' மாத இதழுக்கு ஒரு சோகக் கதை எழுதிக் கொண்டிருந்தேன்.

திடீரென்று எதிர் வீட்டிலே மின்சார விளக்கு பிரகாசித்தது. என் சித்தப்பா வீட்டு மாடி பால்கனியிலே, சீதா நின்று கொண்டிருந்தாள்; விளக்கு ஒளியைக் கண்டதும் உள்ளே செல்ல முயற்சித்தாள்; ஆனால் பின்னால்? கணவன் இராமனே வந்தான். வந்தவன் முதலில் பேசவே இல்லை; 'பட் பட்' என்று சீதா கன்னத்தில் அறைந்தான்.

"ஏண்டி இங்கே நின்றுகொண்டா உன் காதலனைப் பார்க்கிறாய்?"

இந்த வார்த்தைகள் என் காதில் நன்றாக விழுந்தன. அதற்கப்புறம் பால்கனியில் யாருமே இல்லை. "ஐயோ அடிக்காதே! பாவி......" —இப்படிச் சப்தம் தான் உள்ளே இருந்து வந்தன.

என்ன அநியாயம்? சீதாவுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்? நிம்மதியற்ற நான், மன அமைதிபெற மறுநாளே கொழும்பு சென்றேன். அங்கும் எனக்கு அமைதி கிடைக்கவில்லை. மூன்று மாதங்களுக்கு அப்புறம் சீதாவின் நினைவு தாங்கமாட்டாமல் திரும்பி வந்தேன்.

சீதா ஊரில் இல்லை. அடிபட்ட நாளிலிருந்து படுத்த படுக்கையாகி விட்டாளாம் சீதா. குற்றாலத்துக்குச் சென்றால் குணமாகுமென்று டாக்டர் சொல்ல குற்றாலத்திலே இருக்கிறாளாம் சீதா. அன்று மாலையே குற்றாலத்திற்குப் புறப்பட்டேன்.

## நான்

இரவு 11 மணி இருக்கும். அவன் தென்காசி வந்து சேர்ந்தான். அந்த இரவிலேயே குற்றாலம் செல்ல துடி துடித்தது அவன் மனம். பஸ்ஸைப் பார்த்தான். பஸ் இல்லை. குதிரை வண்டியோ மாட்டு வண்டியோ கிடைக்குமா என்று பார்த்தான்; எவனும் வர மறுத்து விட்டான். டாக்ஸியில் செல்லலாம் என்றாலோ, அது இருக்கும் இடமே அவனுக்குத் தெரியவில்லை.

கடைசியில் அவன் எதையுமே லட்சியம் செய்ய வில்லை; கால் நடையாகவே சென்றான். அவன் எதற்கும் பயப்படவில்லை. அவனுக்கு ஒரே எண்ணம் சீதாவைக்காண வேண்டுமென்று. அவன் மனமெல் லாம் சீதாவின் உருவத்தின் மேல் இருந்தது. அவன் கால்கள் சென்ற பக்கமே கடும் வேகமாக நடந்தான். எதிரே ஒரு பிளசர் வேகமாக வந்தது; அவன் அதைக் கண்டும் அஞ்சிவிடவில்லை. அவன் தான் புத்தி சுவா தீனம் இல்லாதவனைப்போல் செல்கிறான் என்றால், பிளசர்காரனுக்கு புத்தி வேண்டாமா? வந்த வேகத்தை விட அதிக வேகத்தில் வர ஆரம்பித்தது அந்த பிளசர். மனிதர்களுக்கே இல்லாத கருணை அந் தக் காருக்கா இருக்கப் போகிறது? அடுத்த வினடி அவன் மேலே கார் ஏறியது. அப்போதாவது அந்தக் கார் நின்றதா? இல்லவே இல்லை. முன்னைவிட வேக மாக அந்தக் கார் பறந்து சென்றது. ஒருவனை அநி யாயமாக ஏற்றிக் கொன்றுவிட்டோமே என்று அந்த

டிரைவர் நினைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கார் மிக வேகமாகச் சென்றும், ரோட்டில் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லுமா? நகரத்திற்குள்ளேயும் அந்தக் கார் அப்படித்தான் சென்றது. இரவு போலீஸ்காரர்கள் சும்மா இருப்பார்களா? காரை நிறுத்தக் கையைக் காட்டினார்கள்; விசிலடித்தார்கள்! அந்த டிரைவர் அசகாய சூரனாயிற்றே, நிற்பானா? முன்னிலும் வேகமாகச் சென்றான்; போலீஸ் வண்டி அந்த பிளசரை துரத்த ஆரம்பித்தது. ஈளமகாராஜா தேர், கண்ணை மூடிவிழிப்பதற்குள் எத்தனையோ காத தூரம் செல்லுமாமே, அதைவிட வேகமாக இரு வண்டிகளும் சென்றன. முன்னால் சென்ற பிளசர் ஒரு திருப்பத்தில் குடை சாய்ந்தது.

டிரைவர் கோர்ட்டிலே நிறுத்தப்பட்டான். அவன்மீது மூன்று கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்டன. அதை மறுத்து அவன் பேச ஆரம்பித்தான்.

"நான் சீதாவின் அடுத்த வீட்டுக்காரன்; அவளை உண்மையில் காதலித்தேன்; அவள் என்னைக் காதலிக்கவில்லை என்று தெரிந்தும் அவளை அடைய முயற்சித்தேன். இது குற்றம் என்பீர்கள். கிடையவே கிடையாது. தன் கட்சிக்காரன் குற்றவாளி என்று தெரிந்துகொண்ட வக்கீல்கூட அவன் நிரபராதி என்று வாதாடி வெற்றிபெற நினைப்பதில்லையா? அதைப் போலதான் நான். என் எண்ணத்திற்குக் குறுக்கே முதலில் ரோட்டிலே செத்தானே அவன் தோன்றினான். அப்புறம் சீதா இராமனுக்கு மனைவியாகி விட்டாள். காதல் வேகத்தில் இராமன் வீட்டு

கார் டிரைவராகச் சேர்ந்தேன்; நோய்வாய்ப்பட்ட சீதாவை குற்றாலத்திற்குக் கொண்டு வந்தோம்; ஆனால், அவள் அங்கேயே மாண்டுவிட்டாள்.

சீதாவின் செத்த பிணத்தைக் காரில் வைத்துக் கொண்டு, நானும் இராமனும் வந்து கொண்டிருந்தோம். எதிரே அவன் வந்தான்; இராமனுக்கு ஒரே ஆத்திரம். இவனால்தான் என் மனைவி செத்தாள்; இவன்மீது காரை ஓட்டு என்று கூறினான். எனக்கும் பழைய கோபம் இருக்கிறதல்லவா? காரை ஏற்றி அவனைக் கொன்றேன்; கடும் வேகத்தில் சென்றேன்; கார் கவிழ்ந்தது; காரில் இருந்த இராமனும் மாண்டான். நியாயமாக நான் செய்தது ஒரே ஒரு கொலைதான்.

கொலை ஒன்றானால் என்ன, இரண்டானால் என்ன, அந்த டிரைவர் கொலைகாரன்! காதல் பற்றவைத்த தீ, உள்ளத்திலே மூண்ட புகை இரண்டும் சேர்ந்து எரிய எரிய........குற்றாலத்திலே சீதாவின் பிணம்! நடு ரோட்டிலே அவன் பிணம்! கார் கவிழ்ந்த காட்டிலே இராமன் பிணம்! தூக்கு மரத்திலே டிரைவர் பிணம்! ஆக **நான்கு பிணங்கள் !**

# மூன்று பிணங்கள்

## பத்மா

*நான் பெண் ; பெயர் பத்மா; பத்தாவதுவரை படித்தவள் ; பாடுபடாமல் வாழும் பங்களாவாசி ; நான் பருவமடைந்து மூன்று வருடங்கள் முழுசாகப் பறந்து விட்டன.*

*என் கழுத்திலே தாலிகட்டத் தகுந்த வாலிபனைத் தேடிக்கொண்டிருந்தார் என் தந்தை. "நீ, நான்" என்று போட்டிபோட்டு எனக்குப் பதியாகவர பலர் குதித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் யாரையுமே பிடிக்கவில்லை. எனக்கல்ல, என் அப்பாவுக்கு. நல்ல வரனுக்காக நாலா பக்கமும் சொல்லியிருந்தார் என் தந்தை.*

*என் தந்தை ஒரு விசித்திர மனிதர் ; அவரை தேசியவாதி என்று சொல்லுவார்கள். ஆனால் நானறிய தேசத்திற்காக அவர் எதையுமே செய்த தில்லை. பட்டம் பதவி எல்லாம் "அடிமைச் சின்னம்" என்று இப்போது ஆர்ப்பரிக்கிறார். ஆனால் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, "ராவ் சாஹிப்" பட்டம் பெற டில்லிக்கு அடிக்கடி போய்வந்திருக்கிறார். இப் போதுகூட எம். எல். ஏ. ஆக வேண்டு மென்று அவ*

ருக்கு உள்ளூர ஆசை. வைதீகபுரிக்கு அதிபராக ஒருவர் உண்டு என்றால் அது என் தந்தையாகத்தான் இருக்கும்.

வாசலோரத்திற்கு நான் வந்துவிட்டால் சாஸ்திரம் போச்சு, சம்பிரதாயம் போச்சு என்று சண்டப்பிர சண்டம் செய்வார். இப்படிப்பட்ட அப்பா பார்க்கிற பர்த்தா எப்படி இருப்பார்? உட்கார் என்றால் உடனே உட்காருகிற "அம்மா பிள்ளை" யாகத்தான் என் அகமுடையான் இருப்பான்! இதில் சந்தேகமில்லை. எப்படியிருந்தால் என்ன? கல்லானாலும் கணவன்! கட்டி மாரடிக்க வேண்டியதுதான்.

ஆனல் அந்தக்காலம் எப்போது? அதுவரைக்கும் நான் அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதானு? நாலு சுவர்களுக்குள் அடங்கிய பங்களாதான் நான் பவனி வரும் உலகமா? எனக்கு நேரம்போவதே சிரமமாய் இருந்தது. தினசரி பல ஊர்களைப் பார்ப்பேன்; நேரில் அல்ல, பத்திரிகை வாயிலாக, என்னைப்போல் ஏங்கிக் கிடக்கும் மோகனங்கிகளையும், கல்யாணமான கனகுஷி காதலர்களையும் என் வீட்டில் இருந்து கொண்டே சந்தித்துப் பேசுவேன்; பலர் எழுதிய ஏட்டின் மூலம். இப்படித்தான் நாட்களைக் கடத்தி வருவேன்.

ஆனல் சோளம் விளையும் சீசனிலே எனக்குப் பொழுது போவதே தெரியாது. எங்கள் பங்களாவின் வேலியையொட்டி, சோளம் ஒரு ஆள் உயரத்திற்கு ஓங்கி வளர்ந்துவிடும். சோளக்காடு என்ற பெயரையும்

பெற்றுவிடும். சோளக் கதிர் தின்பதிலே எனக்கு ஒரே ஆசை. என் வீட்டை அடுத்திருந்த சோளக் காட்டிற்குள் புகுந்து சோளக் கதிர்களை நான் வேட்டையாட யாருமே தடை சொன்னதில்லை. நான் தின்று தீர்த்த கதிர்களுக்குக் கணக்கு போட்டுப் பார்த்தால், காட்டுக்காரனுக்கு நஷ்டமாகத்தான் இருக்கும். அப்பா காரின் "ஆரன்" சப்தம் கேட்டால் அடுத்த விநாடி வீட்டுக்குள்ளே இருப்பேன்.

அந்த வருஷத்திலே சோளக்காடு மிகவும் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. என் வீட்டுப் பக்கத்தில் இருந்த கதிர்களை யெல்லாம் காலி செய்துவிட்டேன். இரு ஓரங்களிலும் உள்ள கதிர்களை எடுக்கச் சென்றால்...........ரோட்டில் போவோர் வருவோருக்கு காட்டில் நிற்பவரை நிச்சயம் தெரிந்துவிடும். நடுக்காட்டிற்குப் போய்விட்டால் யாரும் பார்த்துவிட முடியாது. ஆனால், பாம்புகள் நடமாட்டம் இருக்குமோ என்ற பயம் எனக்கிருந்தது.

கதிர்மேல் காதல்கொண்ட நான் எதற்கும் அஞ்சாமல் நடுக்காட்டை நோக்கி நடந்தேன். நான் உள்ளே செல்லச்செல்ல "சலசல" என்ற சப்தம் கேட்டது. பாம்பு வரும்போது அப்படித்தான் சப்தம் வருமென்று கேள்விப்பட்டிருந்தேன். எனக்கு ஒரே திகிலாய் இருந்தது ; திரும்பிவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் "நில்" என்ற சப்தம் கேட்டது ; திடுக்

கிட்டேன். காட்டுக்காரனாக இருக்குமோ என்று கலங்கினேன். ஆனால்......

என் எதிரே ஒரு ஆணழகன் நின்றான். அவன் மிகவும் சோர்ந்துபோய் காட்சியளித்தான். ஆனால் அவன் உறுதியான உள்ளங்கொண்டவன் என்பதை அவன் தோற்றம் விளக்கியது. அவன் வாட்டத்தோடு காணப்பட்டான்; நான் பதட்டத்தோடு நின்றேன். "யார் நீ" என்று தடுமாற்றத்தோடு கேட்டான். "பக்கத்து பங்களா" என்று பதறிக்கொண்டே சொன்னேன். "குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுப்பாயா?" என்று தயவாகக் கேட்டான். அதை என்னால் தட்டிப் பேச முடியவில்லை.

" தண்ணீர் கொண்டுபோகவா? அப்பா அம்மா பார்த்தால்.......? வேண்டாம்........வேண்டாமா? பாவம் அவன் தாகத்தால் தவிக்கிறான். ஆம்! கொண்டுதான் போகவேண்டும் "

இந்த மனப்போராட்டத்திற்குப் பின் துணிந்து தண்ணீர் கொண்டு சென்றேன். தாகம்தீர குடித்தான். "அம்மா! இந்த உதவியை உயிர் உள்ள வரை மறக்கமாட்டேன்"—இப்படி எனக்கு நன்றி செலுத்தினான்.

அவன் தண்ணீர் குடித்தபின் அவன் முகத்திலே ஏற்பட்ட தேஜஸ் சொல்லி முடியாது. அவ்வளவு அழகாக இருந்தான். அவனைப் பார்த்தால் குடியான வனைப்போல் தெரியவில்லை. காட்டுக்குச் சொந்தக்

கார மிட்டாதாராகவும் தெரியவில்லை; நான் அறிந்த வரை வேற்றூர்க்காரனுகவே காணப்பட்டான். அவன் கையிலே லெனின், கார்ல்மார்க்ஸ் ஆகிய புத்தகங்கள் இருந்தன. அவன் யார்? சோளக் காட்டு நடுவே ஏன் வந்தான்?

## தியாகமூர்த்தி

உன் கேள்விகளுக்கு நான் பதில் சொல்கிறேன். நான் வெளியூர்க்காரன். நல்ல குடும்பத்திலே பிறந் தவன்தான். என் பெயர் தியாகமூர்த்தி.

என்னைப் பார்த்தால் பயங்கரமாகத் தெரிகிறதா? அதெல்லாம் இல்லையென்று சொல்லுவாய். ஆனுல் எனக்குப் பெயர் பயங்கரவாதி; புரட்சிக்காரன்; அர சாங்கத்தைக் கவிழ்ப்பவன். நான் அப்படியா தோற்றமளிக்கிறேன்?

நான் ஒரு பிரசங்கி; இருமுறை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன்; ஜாதிபேதம், மதவாதம், முதலாளி தொழிலாளி வேற்றுமை ஒழியவேண்டும் என்பது என் கொள்கை. இதற்காகத்தான் பாடுபட்டேன்.

இந்த ஜனநாயக நாட்டிலே என்னைச் சேர்ந்தவர் களெல்லாம் சட்டவிரோத கூட்டமாம்; தண்டனைக் குரியவர்களாம். என்னைப்போல இன்னும் பலர் இப்படித்தான் தலைமறைவாய் இருக்கிருர்கள். எங் களைத் தேடி அலைகிருர்கள் போலீஸ் புலிகள். சிக்கி

ஞல் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக வேண்டும், அல்லது ஆயுள் பூராவும் சிறையிலே இருக்கவேண்டும்.

என்மீது இருக்கிற குற்றம் கொஞ்சமல்ல. யார் யாரையோ கொல்ல முயன்றதாக சதிவழக்கு; ஓடும் ரயிலைக் கவிழ்க்க முயற்சித்தேன் என்ற குற்றச் சாட்டு. இப்படி எத்தனையோ என்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. நல்லகாலம் வரும்வரை நாட்டுக்குள்ளே நான் போகமுடியாது. அதனுல்தான் இந்த சோளக் காட்டுக்குள்ளே பதுங்கி இருக்கிறேன்.

பகல் பூராவும் பட்டினிதான்; இரவு நேரத்தில் போலீஸ் பாரா அதிகமில்லாதிருந்தால் வெளியே சென்று ஏதாவது சாப்பிட்டுத் திரும்புவேன். மற்ற படி இந்த சோளக் கதிர்கள்தான் எனது ஆகாரம்.

இன்று எனக்குத் தாகம் அதிகமாக இருந்தது; நல்ல நேரத்தில் நீ வந்தாய்; நீ மாத்திரம் தண்ணீர் தந்திராவிட்டால் இங்கேயே பிணமாகியிருப்பேன். நீ செய்தது சிறு உதவி என்றுலும் என் உயிரைக் காப்பாற்றிய உயர்ந்த உதவி, உன்னை என் உயிருள்ள வரை மறக்கமாட்டேன்.

**பத்மா**

எப்படி மறக்கமுடியும்? தியாகமூர்த்தியின் சோகக் கதை என் உள்ளத்தை உருக்கிவிட்டது. ஆட்சி பீடத்திலே அமர்ந்திருப்பவர்களுக்கு எதிர்

கட்சி என்றால் இவ்வளவு பயம் எதற்காக? நிரபராதிகள் மீது வாரண்டுகள் பிறப்பிப்பது ஏன்? தியாக மூர்த்தியின் மீது எனக்குக் கருணை பிறந்ததுபோல் அவர் கட்சியின்மீது மக்களுக்குக் கருணை பிறப்பதிலே ஆச்சரியம் என்ன?

பச்சைத் தண்ணீர் கொடுக்கத் தயங்கிய நான், தினசரி மூன்று வேளை அவருக்குப் பலகாரம் காப்பியிலிருந்து சாப்பாடுவரை கொடுத்து வந்தேன். என் வீட்டில் யாருக்குமே தெரியாது. திருட்டுத்தனமாகத் தான் அந்த தியாகத்தைச் செய்து வந்தேன். அவர் வேண்டாம் என்று எவ்வளவோ சொன்னார். ஆனால் பாழும் மனம் ஏனோ கேட்கவில்லை. இப்பொழுதெல்லாம் எனக்குப் பொழுதுபோவதே தெரியவில்லை. அவர் பேச்சு எனக்கு ருசியாக இருந்தது.

ஒருநாள் ஒரு பானை தண்ணீர் கொண்டுசென்று அவரைக் குளிக்க வைத்தேன்; அழுக்கேறிய அவர் உடுப்புகளை எடுத்துவிட்டு என் தந்தையின் நல்ல உடுப்புகளைப் போடச் செய்தேன்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அவரைச் சந்திக்க முடியாதபடி என் தந்தை வீட்டிலேயே இருப்பார்; என் தந்தைமீது எனக்குக் கோபம் கோபமாய் வரும். அவர் பட்டினி கிடப்பாரே என்று என் மனம் பதறும். அவரைப் பார்க்க முடியவில்லையே என்று பரிதவிப்பேன்.

எனக்கு ஏன் இந்த உணர்ச்சி எல்லாம்? அவர் யார்? அவருக்காக நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

இவைகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் என் மனதில் ஏதோ ஒரு உணர்ச்சி அவருக்காக உயிரைக்கூடத் தியாகம் செய்யத் தயாராக இருந்தது.

ஒருநாள் அவரிடம் துணிந்து என் காதலை வெளியிட்டேன்; ஆனால் அவர் மிகவும் பயந்துவிட்டார். வேண்டாம் என்றார். நடக்காத காரியத்தில் நாட்டம் வைக்காதே என்று என்னென்னவோ சொன்னார். ஆனால் நான் விடவில்லை.

சோளக்காட்டு காதலர்களாக நாங்கள் மாறினோம். அவர் ஸ்பரிசத்திலே என் உடம்பே பூரித்தது. உலகத்தில் உள்ள இன்பத்தை எல்லாம் சோளக்காட்டிலே கண்டேன். ஆனால் ஒருநாள் அவரைக் காணவில்லை; படாதபாடு பட்டேன்; ஒருநாள் காடு பூராவும் தேடினேன்; அவரைக் காணவேயில்லை! திரும்பி வரவுமில்லை. இரவெல்லாம் கண்ணீர்விட்டு அழுவேன்.

அன்றுவந்த தினசரிப் பேப்பரைப் பார்த்து 'ஓ' வென அழுதுவிட்டேன். ஏதோ ரகசியக் கூட்டம் போட்டுப் பேசும்போது தியாகமூர்த்தியும் மற்றும் சில பயங்கரவாதிகளும் போலீசரால் கைது செய்யப் பட்டதாக செய்தி இருந்தது.

இனி அவர் முடிவு என்ன? என் கதி என்ன? இதை நினைக்க நினைக்க வேதனையாக இருந்தது. அவர் தூக்குமரத்திலே தொங்கப் போகிறார்; நான் இன்னொருவனின் மனைவியாக ஏங்கப் போகிறேன். விதி

என்பது இந்த ரூபத்தில்தான் வேலை செய்கிறது. இதற்கு விதி விலக்கே இருப்பது இல்லை.

என் தாய் மாமன் படிப்போ பணமோ இல்லாதவன்தான்; ஆனால் தேசபக்தன் என்று பெயரெடுத்தவன்; மந்திரிகளிலே பலரை நன்கு தெரிந்தவன்; என் தந்தையின் பதவி ஆசைக்குப் பக்கபலமாக இருந்தவன். என் தந்தையின் கனவு நிறைவேற அவனைக் கருவியாகப் பயன்படுத்தினர்; அவனே என்னை அணைக்கத் திட்டம் போட்டான்; அதற்கு என் தந்தையும் உடன்பட்டார்.

பேதை நான் என்ன செய்ய முடியும்? தியாக மூர்த்தி வருவார் வருவார் என்று ஒரு வருடத்தைப் போக்கினேன். அவர் வரவேயில்லை. என் கல்யாணத்திற்கு நாளும் நிச்சயிக்கப்பட்டது. என் எண்ணத்தை யாருமே லட்சியம் செய்யவில்லை. மேளதாளத்தோடு தாலி கட்ட என் தாய் மாமன் வந்தான்; புரோகிதர் மந்திரம் சொல்லக் கல்யாணம் முடிந்தது; கர்த்தலுக்கு வழக்கமான முடிவும் ஏற்பட்டுவிட்டது.

இனி நான் என்ன செய்யமுடியும்? புதுக் கணவனுக்கு விளையாடும் பதுமையாக நான் மாறவேண்டும். அதற்கு அஸ்திவாரமாக சாந்தி முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. என் வீட்டில்தான் அந்த வைபவம் ஆரம்பிக்க முடிவு செய்திருந்தார்கள்.

அன்று எனக்கு ஒரே தலைவலி. மனக் கவலையால் மயங்கியே கிடந்தேன்; அப்படியிருந்தும் நாளும்

நட்சத்திரமும் நன்ருக இருந்ததால் பெயரளவுக்கு சாந்தி முகூர்த்தம் நடத்துவதென தீர்மானித்தார்கள். நான் ஒரு கட்டிலில் கிடந்தேன்; என் புது பர்த்தா இன்னொரு கட்டிலிலே கிடந்தார். அந்த இரவு எனக்கு ஏனே பயங்கரமாக இருந்தது. பழைய நினைவுகளெல்லாம் என் கண் முன்னே தோன்றி என்னை சித்திரவதை செய்தது.

என் காதலன் தியாகமூர்த்தியை நாலைந்து அதிகாரிகள் கையிலே விலங்குபோட்டு நடத்திச் சென்ருர்கள். தூக்குமேடையிலே நிறுத்தினுர்கள். உனக்கு என்ன வேண்டும் என்று என் காதலரைக் கேட்டார்கள். "என் காதலி பத்மாவிடம் நான் செத்துவிட்டதாக அறிவித்து விடுங்கள்" என்று அவர் சொன்னுர். 'ஐயோ' என்று அலறினேனே இல்லையோ எனக்குத் தெரியாது. விழித்துக் கொண்டேன். என்னுல் அங்கு இருக்க முடியவில்லை. என் காதலரைப் பார்க்காவிட்டாலும், நாங்கள் கொஞ்சிக் குலாவிய அந்த இடத்தை யாவது பார்க்க வேண்டும் என்று என் மனம் துடித்தது. அறையை விட்டு அந்த இரவில் வெளியேறினேன்.

சோளக்காட்டை நோக்கி ஓடினேன். பாம்பு இருந்தால் கடிக்கட்டும் என்ற துணிச்சலோடு நடுக் காட்டை நோக்கி ஓடினேன். நான் கண்டது கனவா? என்னையே என்னுல் நம்பமுடியவில்லை. என் காதலர் தியாகமூர்த்தி கண்ணீர் விட்டபடி உட்கார்ந்திருந்தார்.

“ஆ நீங்களா? இன்று வந்தவர் நேற்று வந்திருக்கக் கூடாதா?” என்று கதறி அழுதுவிட்டேன். “நேற்றுத்தான் ஜெயிலை விட்டுத் தப்பினேன். இன்று வந்து சேர்ந்தேன். பரவாயில்லை நடந்ததை மறந்துவிடு; உன் கணவனோடு வாழ்க்கை நடத்து” என்று அவர் எனக்கு ஆறுதல் சொன்னார். ஆனால் அப்போது யாரோ ஒருவன் பின்புறம் வந்து காலால் என் தலையில் ஓங்கி மிதித்தான். நான் கீழே விழுந்தேன்.

## சோளக்காடு

அந்த முரடன் மிதிக்கும்போது பூங்கொடியாள் கீழே விழாமல் என்ன செய்யமுடியும்! அதே முரடன் தியாகமூர்த்தியையும் எட்டி மிதிக்கச் சென்றான். ஆனால் மூர்த்தி என்ன கோழையா? முரடனும் மூர்த்தியும் கட்டிப் புரண்டார்கள்; இரத்த நீரை என் காட்டிலே பாய்ச்சினார்கள். அப்புறம் அமைதி நிலவியது.

ஆதவன் உதித்தான்; என்னை அறுவடை செய்ய என் சொந்தக்காரன் ஆட்களோடு வந்துவிட்டான். சோளக்காடு என்று பெயர்பெற்ற என்னைக் கட்டாந்தரையாக ஆக்கும் முன் அவன் கண்டெடுத்தது மூன்று பிணங்கள.

# இரு பிணங்கள்

அவன் கொலைகாரன்! இவன் திருடன்! இப்படிச் சுலபமாகத் தீர்ப்புத் தரப்படுகிறது, சட்டத்தின் பெயரால். ஆனால் அவன் கொலைகாரனா? திருடனா? இந்தக் கவலை வெறும் எழுத்துக்களால் கோர்க்கப்பட்ட வார்த்தைகளுக்குள் அடங்கிய சட்டத்திற்கு இருப்பதே இல்லை. சட்டம் ஓர் வட்டத்தை (Circle) போன்றது! அந்த வட்டத்திற்குள்ளே, வக்கீலின் வாதம்—வறண்ட சாட்சியம்—எதிர்பாராத தீர்ப்பு ஆகியவைகளைத்தான் காண முடியும்.

சட்டத்தின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டலாம்; ஆனால் சரியான நீதியை? முடியவே முடியாது. நீதி என்பது அகராதிக்குள் அடங்கியதல்ல, ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது.

"நான்தான் குற்றவாளி! நான்தான் கொலை செய்தேன்!" கொஞ்சமும் பயமோ சஞ்சலமோ இன்றி மோகன் கோர்ட்டிலே இப்படி சொன்னான். செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பு; மோகனுக்குத் தூக்குத் தண்டனை.

"என்னை சீக்கிரம் தூக்குங்கள்! உயிரோடு வைக்காதீர்கள்!"

"கொல்லுங்கள் என்னை! பயமாக இருந்தால்..... நானாவது செத்து மடிகிறேன்......"-இப்படியே கதறிக் கொண்டிருந்தான் மோகன்.

சிறைச்சாலை பூராவும் மோகனைப்பற்றி பேசாத வார்டரோ, கைதியோ, அதிகாரியோ கிடையாது. மோகன் இருக்கும்....தூக்குக் கைதிகளின் இடமான 'கண்டம்' அருகே செல்வதற்கு எல்லோருக்கும் பயம்.

சிங்கம், புலி போன்ற மிருகங்களுக்கு சர்க்கஸ் காரன் கூட, தைரியமாகக் கூட்டுக்குள்ளே சென்று ஆகாரம் வைப்பான். ஆனால் மோகனுக்கு? கம்பிக்கு வெளியே எட்டி நின்றபடியேதான் சாப்பாடும் தண்ணீரும் தினமும் தரப்பட்டது.

சீக்கிரம் சாகப்போகிறார்கள் என்ற காரணத் தாலோ என்னவோ, ஜெயிலிலே தூக்குக் கைதிகளுக்கு அதிக சலுகை உண்டு. அவர்கள் விருப்பப்படிகூட சாமான் வகைகள் தருவதுண்டு. ஆனால் மோகன் இவைகளில் எதையுமே விரும்புவதில்லை.

"செஷன்ஸ் கோர்ட்டில் உனக்குத் தூக்குத் தண் டனை தந்துவிட்டார்கள். ஹைகோர்ட்டுக்கு தர்ம அப்பீல் செய்ய இந்தப் பாரத்தில் ஒரு கையெழுத்துப் போடு" என்று ஜெயில் சூப்ரெண்ட் மோகனை கெஞ்சிக் கேட்டார். "எனக்கு அப்பீல் தேவையில்லை; என்னை சீக்கிரம் கொல்லுங்கள்" என்று பிடிவாதமாக மோகன் கூறினான். ஜெயில் சூப்ரெண்டுக்கு ஒரே ஆச்சரியம். அவர் வாழ்நாளில் சாகத் துணிந்த

கைதிலை அவர் அன்றுதான் கண்டார். "சரி! இதிலே கையெழுத்துப் போடு; நாளையே உன்னைத் தூக்கிவிட ஏற்பாடு செய்கிறேன்!" என்று சூப்ரெண்ட் சொன்னதும், மகிழ்ச்சியோடு கையெழுத்துப் போட்டான் மோகன்.

அன்று இரவு மோகனுக்கு ஒரே குஷி! 'நாளை சாகப் போகிறேன்! அப்புறம் ஆனந்த வாழ்க்கை! சாவே வா! சீக்கிரம் வா!' சிரித்துக்கொண்டே சாக சித்தமாய் இருக்கிறேன், வா!' இப்படிக் கூறிக்கொண்டிருந்தவன் திடீரென்று பாட ஆரம்பித்தான். அந்தப் பாட்டு இரண்டே அடிதான்!

பிரேமராஜ ராணியே நீ கண்கலங்காதே.
விரைவில் இன்ப சாந்தியிலே—
ஒன்றாய் சேர்ந்திடுவோம் நாமே

என்ன பிரேமை? யார் அந்த ராணி? சாகப் போகிறவனுக்கு எங்கே சாந்தி? எப்படி ஒன்றாய் சேர்வது?

ராணி அவன் மாமன் மகள். மழலை பேசும் காலத்திலிருந்து மங்கையான பருவம்வரை மோகன் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்தாள் ராணி! உடைக்க முடியாத மலையாக இருந்தது அவர்களின் காதல் உள்ளம்.

ராணியை ஒருநாள் பார்க்காவிட்டால் செத்தவன் போல, சலனமற்று காட்சியளிப்பான் மோகன்.

ராணிக்கு இது நன்கு தெரியும். ஆனால் கன்னிப் பெண் ராணி நினைத்த நேரமெல்லாம் வெளியே வர முடியுமா? சொந்தக்காரிதானே என்ற கருத்தில் மாமா வீடே சதமென்று எந்த நேரமும் மோகன் இருக்க முடியுமா? சந்திப்பில் சங்கடங்கள் இருக்கத்தான் செய்தன.

இந்த நிலையில்கூட ராணி துணிந்து மோகன் வீட்டுக்குச் சிலசமயம் வருவாள். ராணி தன் மகனுக்கு முறைப் பெண்தானே என்று எண்ணி மோகனின் தாய் இருவர் பேச்சுக்கும் இடையூறாக என்றுமே இருந்ததில்லை. ஆனால் காதல் விஷயங்களைத் தாயின் கண் எதிரே பேச முடியுமா?

'காதல்' என்றால் அது ஒரு கரு நாகம் என்று கருதுகிற நாடு இது! இயற்கையின் சிருஷ்டியிலே, எந்த இதயத்திலும் எந்த வயதிலும், காதல் உதயமாக இடம் இருக்குமே யானால்...அந்தக் காதலை வெளியிடும் உரிமை இருக்கவேண்டும். ஒருவரை ஒருவர் அபிப்பிராயம் கேட்டு அதன்படி நடக்கும் வசதியையும் வழங்க வேண்டும். இது இல்லாத நாட்டிலே 'கள்ளத்தனம்' இருக்கத்தான் செய்யும்.

ராணியும் மோகனும் ஒருவரை ஒருவர் காதலித்தும், அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள—சந்தித்து சந்தோஷமாக இருக்க; பாழும் சமூகம் இடந்தரவில்லை. இங்கும் அங்கும் கடிதங்கள் பறந்தன. அந்தக் கடிதங்கள் வெறும் வார்த்தைகளால்தான் எழுதப்படு

கின்றன. ஆனல் அவை வெறும் எழுத்துக்களா? இல்லவே இல்லே. சிதறிக் கிடக்கும் இரு உள்ளத்தை சேர்த்து இழுக்கும் ஜீவன்!

ராணிஅனுப்பிய கடிதத்தை விரிப்பான் மோகன். மல்லிகையின் நறுமணம் 'கமகம' என்று வரும். அன்று அலர்ந்த மலர் ஒன்று உள்ளே இருக்கும். அதைக் கையில் எடுப்பான்; கண்களிலே ஒத்திக் கொள்வான்; 'இச்' என்று முத்தம் வைப்பான்; அப்புறம் மூக்கால் நுகருவான். இரவெல்லாம் அந்த மலருடன் உறங்குவான்; மாதோடு உறங்கும் நாள் எந்நாளோ--என்று விதவிதமான கனவெல்லாம் காண்பான்; கண் விழித்துப் பார்ப்பான்; கருகிய மலர் கையில் இருக்கும். காதலும் இப்படி யாகுமோ? மோகனின் கண்களில் நீர் நிரம்பும்.

அன்று ராணி வந்த சமயம் மோகன் தனியாக இருந்தான்; "அன்பே" என்று சொல்லி அணைத்து ஒரு முத்தமும் கொடுத்தான். அதுதான் முதல் முத்தம். இருவருக்கும் மூச்சு நின்றது போன்ற உணர்ச்சி! இதழோடு இதழ் இணைவதிலே இத்தனை இன்பமா? இந்த இரகசியம் அவர்களுக்கு அன்றுதான் தெரியும். அப்புறம் பல சந்திப்பு! பல முத்தம்! ஆனல் அப்புறம்?

மோகனின் தாய், அவள் கணவன் சென்ற வழி நோக்கிப் போய்விட்டாள். மோகன் அனுதையானன்; வறுமை அவனை வாட்டியது; இந்த நிலேயில் ராணியை அடைய முடியுமா? வேலேயற்றவனுக்கு பெண் தர

மாமா இசைவாரா? ஒருகாலும் இசையமாட்டார். இந்தக் காரணத்தை வைத்து மோகன் பட்டாளத்தில் சேர்ந்தான்.

மோகன் ஊரை விட்டுப் பிரியும்போது ராணி 'ஓ' வென அழ ஆரம்பித்தாள்; சீக்கிரம் வருகிறேன் என்று ஆறுதல் சொல்லி அகன்றான் மோகன். ராணியின் நினைவு மோகனை தினமும் கொன்று கொண்டே வந்தது.

ராணியை அடைய தன் மாமா மறுப்பு கூறுதிருப் பதற்காக தான்பெற்ற சம்பளத்தில் மாதம் நூறு ரூபாயைத் தன் மாமாவிற்கே மோகன் அனுப்பி சேமித்துவைக்க எழுதியிருந்தான்; இடையிடையே ராணியைப் பற்றியும் விசாரிப்பான்.

பத்து மாதங்கள் கடந்தன. மோகன் ஊருக்கு வந்தான்; மாமா வீட்டிலேயே நேராகப் போய் இறங் கினான். ஆசையாகக் காத்திருந்த ராணியின் கண்கள் மோகன்மீது பாய்ந்தன; இருவர் உள்ளமும் எக்களித்தது.

மோகன் வந்து 14 தினங்கள் ஓடி மறைந்தன; நாளை அவன் புறப்படவேண்டும். அந்த இரவில் உண்மையிலேயே இருள் சூழ்ந்திருந்தது. உண்மைக் காதலர்கள் கொல்லைப் புறத்திலே ஒன்று கூடினர். அடுத்த தடவை வந்து உன்னை மணக்கிறேன்; அதற் குள் பணமும் சேர்ந்துவிடும்—என்று சொல்லி ஆசை முத்தம் கொடுத்து சட்டைத்துணி ஒன்று பரிசளித் தான் மோகன். கண்ணீர் வழியும் முகத்தோடு அந்தப் பரிசை ராணி பெற்றுக்கொண்டாள்.

மறுநாளும் மப்பும் மந்தாரமுமாகவே இருந்தது. மோகன் பிரிந்தான்; தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான். தன் நினைவின்றித் தத்தளித்தான். 'ராணி! ராணி!' என்று சதா உச்சரித்தான். ஆணிவேரைப் போல ராணி அவன் மனதிலே ஆழப் பதிந்திருந்தாள். அவளைவிட்டு அரைக்கணங்கூட இருக்க முடியாது என்று அவன் மனம் கூறியது.

ராணியை மறக்க என்னவெல்லாமோ செய்து பார்த்தான்; எதுவும் பலனளிக்கவில்லை; முடிவில் குடிப்பதென்று அளவுக்கு மீறிக் குடிக்கவும் செய்தான்! அப்போதும் ராணி அவனைவிட்டு அகலவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றான் மோகன். பைத்தியம் பிடித்துவிடுமோ என்றுகூட பயப்பட்டான் மோகன்.

நல்லவேளையாக ஐதராபாத் சண்டை வந்தது. மோகன் போரில் ஈடுபட்டான். சஞ்சலம் நிறைந்த அவன் மனதிற்கு போர் ஆறுதலை அளித்தது. எதிர் பார்த்ததற்குமேல் ஐதராபாத் யுத்தம் சீக்கிரம் வெற்றியுடன் முடிந்தது.

மோகனுக்கு ஒருமாதம் லீவு கிடைத்தது; அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; ஊர்போனதும் ராணியை மணந்துவிடலாம் என்று பேரானந்தத்தில் துள்ளிக் குதித்து ஊர் வந்தான் மோகன்.

"சீக்கிரம் வண்டியை ஓட்டு" என்று வண்டிக்கார

னிடம் கோபத்தைக் காட்டினன், ராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் மோகன். வண்டி வீட்டு முன் வந்து நின்றது. வீடு பூட்டிக் கிடந்தது. பக்கத்து வீட்டில் விசாரித்தான்.

"ராணியின் மாப்பிள்ளை ஊருக்கு எல்லோரும் போயிருக்கிறார்கள்!" என்ற பதில்கேட்டு மோகன் திடுக்கிட்டான். "என் ராணிக்குக் கல்யாணமாகிவிட்டதா?" இப்படி அவன் உள்ளம் படபடத்தது. வண்டியைத் திருப்பினன்; சத்திரத்துக்குச் சென்றான். அவன் மனம் அலைமோதியது; அன்று பூராவும் தூக்கம் இல்லை. மறுநாள் காலை 10 மணிக்குத் திடீரென்று விழித்தான். மறந்துபோன விஷயமெல்லாம் நினைவுக்கு வந்தன; பித்துபிடித்தவனைப்போல் ஊருக்கு வெளியே உள்ள தோட்டத்தை நோக்கி அவன் கால்கள் நடந்தன. அவன் தலை சுழன்றது; மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்தான்; தூரத்தில் ராணியைப் போல ஒருபெண் கையில் குடத்துடன் வருவதைக் கண்டான்; நிமிர்ந்து பார்த்தான்; ராணிதான்; சாட்சாத் ராணிதான்; எழுந்து நின்றான். அவள் பக்கத்தில் வந்ததும் முன்னல் போய் நின்றான்; ராணி திடுக்கிட்டாள்.

"ஆ நீங்களா?"

"துரோகி! காதலை மறந்தாய்! எழுதிய கடிதங்களை மறந்தாய்! கொடுத்த முத்தங்களை மறந்தாய்! இன்று இன்னொருவனின் மனைவியாகி, நம்பிய என்னை நலிய வைத்துவிட்டாய்! இதோ பார்! இதோ பார் நீ எழுதிய

காதல் கடிதங்கள்! இப்படி எழுதிய நீயா எனக்குத் துரோகம் செய்துவிட்டாய்?"

"அத்தான்! என்மேல் குற்றமில்லை. நான் உங்களைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று சொன்னேன்; ஆனால் என்னைக் கட்டாயப் படுத்தி இக்கதிக்கு ஆளாக்கி விட்டார்கள்."

"இது உண்மையானால் நான் சொல்கிறபடி நீ செய்; செய்ய வேண்டும். உன் கழுத்தில் தாலி இருந்தாலும் கவலை இல்லை. இப்படியே என்னுடன் வா. எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்ளலாம்."

"அதெப்படி முடியும்? அத்தான்! ஊரும் சமூகமும் என்னை ஏசும்? அப்பா அம்மாவுக்குக் கெட்ட பெயர் வரும்! வேண்டாம் அத்தான்!"

"நான் சொல்வதை மறுக்கவா செய்கிறாய்? என் காதல் செத்துவிட்டது. இனி உயிரோடு இருக்க வேண்டியது எதுவும் இல்லை"—இப்படி மோகன் கூறி முடித்தானோ இல்லையோ, அடுத்த வினாடி மோகன் கையிலே ராணி இருந்தாள். 'விட்டுவிடு' என்று ராணி அலறினாள்! ஆனால் 'தொப்' என்ற சப்தம் கேட்டது. காதல் கடிதங்களுடன் ராணி மூழ்கி மூழ்கி எழுந்தாள்.

மோகன் ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தான். காதல், காதல், என்று கத்திக்கொண்டே ஓடினான்; போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்; அங்கிருப்போர் மோகனைப் பைத்தியம் என்றனர்; மோகனும்தான் பைத்தியந்தான் என்று ஒப்புக்

கொண்டதோடு ராணியைக் கொலை செய்துவிட்ட தாகக் கூறினன்; வழக்கு நடந்தது; மோகன் குற்றத்தைத் தானே ஒப்புக்கொண்டான்.

மோகன் சாவதற்கு சந்தோஷப்பட்டான். சீக்கிரமாகச் செத்து பிரேமராஜ ராணியோடு ஒன்ருச் சேரவேண்டும் என்று ஆசைப்பட்டான்; ஆனல் சாக விரும்பிய மோகனுக்கு, ராணி தற்கொலை செய்துகொண்டிருக்கலாம், பைத்தியத்தில் தானே கொன்றதாக மோகன் ஒப்புக் கொண்டிருக்கலாம் என்று ஹைகோர்ட் அப்பீலிலே கூறப்பட்டு விடுதலை கிடைத்தது; மோகன் வெளியே பிடித்துத் தள்ளப்பட்டான். ஆனல் ராணி இறந்த அதே கிணற்றில் மோகனின் பிரேதமும் மிதந்துவிட்டது.

# பிணம்

காதலாம் காதல்! மனிதனிடம் மகிழ்ச்சி இருக்கக் கூடாது என்ற மனப்பான்மையில், இந்தக் காதல் என்ற கருநாகத்தைக் கடவுள் சிருஷ்டித்தான் போலும்! காதலுக்கு எப்போதுமே சுபமான முடிவு இருப்பதில்லை. காதலின் ஆரம்பம் அல்லல்! கடைசி கட்டம் சாதல்!

இது தெரிந்தும் ஆறு அறிவு கொண்ட மனிதக் கூட்டம், இந்தக் காதலில் சிக்கி ஏன் சீரழிகிறது? இந்தக் காதல் வலைக்குள் சிக்கிக் கூட்டின் முன், சக்தி வாய்ந்த மனிதர்கள் ஈக்கள்தானா? அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காதல் பலியாகவேண்டிய அவசியமே இல்லை.

கணேஷ் சிறைச்சாலைக்கு ஏன் வந்தான்? அவனுக்கு ஏன் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது? அவன் நடமாடும் மனிதனாக இல்லாமல் பிணமாக இருக்கிறானே ஏன்? அவன் ஏன் பிரமை பிடித்த வனைப்போல 'மௌனி'யாக இருக்கிறான்.

எல்லாம் காதலின் கைங்கரியம் என்றாலே கஷ்டம் என்றுதான் அர்த்தம்; காதல் தன் வேலையை ஆரம்பித்தது. அதைத்தான் சிறைச்சாலையில் அனுபவித்துக்கொண்டிருந்தான் கணேஷ்.

காதலன் ஒருவன்! காதலி இருவர்! கணேஷ் ஒருத்தியைக் காதலித்தான்; ஆனால், அங்கே வழக்க மான எதிர்ப்பு! இன்னொருத்தி மாண்டாள்; அபாண்டப் பழி கணேஷ்மீது விழுந்தது. அதன் முடிவு? சிறைச் சாலை! சித்தப்பிரமை! கைதிகளிடம் கதையைச் சொல்கிறான் கணேஷ்.

சிறு வயது முதல் தாய் தந்தை இழந்த அனாதை நான். என் மாமா வீட்டிலே வளர்ந்து வந்தேன்; தன் மகன் சுரேஷ்போலவே என்னையும் போற்றி வந்தார். ஆனால், சுரேஷ் என்னைக் கொஞ்சம்கூட மதிக்கவில்லை. என்னை வேலைக்காரனாக நடத்தவேண் டும் என்று சுரேஷ் நினைத்தான். ஆனால் சுரேஷ் தங்கை ஆஷா? அன்பே உருவெடுத்த அழகுராணி அவள். நான் பட்டினி இருக்கவோ, கஷ்டமான வேலை செய்வதையோ காண சகிக்கவே மாட்டாள். தன் அப்பாவிடம் சொல்லி சுரேஷை மிரட்டுவாள். ஆனால்—என் மாமாவின் மரணத்திற்குப் பின்?

கடிவாளம் இல்லாத குதிரையைப்போல் ஓட ஆரம் பித்தான், என்மீதும் ஆஷாமீதும் சுரேஷ். மஞ்சத்தில் படுத்த என்னை மண்தரையில் தள்ளினான். பருப்பும் பாலும் சாப்பிட்ட எனக்கு பழையது போட்டான், என்னோடு சேரக்கூடாது என்று ஆஷாவுக்குப் புது உத்தரவு போட்டான்.

குழந்தையாக இருக்கும்போதே என்னைப் பிரிய மறுத்த ஆஷா, பருவத்தில் மறப்பாளா? எங்கள் சந்

திப்பை வானத்து சந்திரன் தான் அறிவான். பயமில்லாத நேரடியான சந்திப்பிலே இருக்கிற சந்தோஷத்தைவிட கள்ளச் சந்திப்பிலே ஓர் தனி இன்பம் இருக்கிறது. அதை நாங்கள் தினமும் அனுபவித்தோம். ஆஷா வருகிறபொழுதெல்லாம் தன் தலையிலிருந்து ஒரு மல்லிகை மலர் எடுத்து எனக்கு பரிசளிப்பாள். அந்த மல்லிகை மலரின் நறுமணத்தை நான் இப்போது நினைத்தாலும், நாற்றமெடுத்த இந்த சிறைச்சாலை எனக்குச் சிங்காரச் சோலையாக தோன்றுகிறது.

அன்று பூவுதிர்காலம் என்றுதான் நினைக்கிறேன். சந்திரன் தன் கதிர்களை ஒன்றுவிடாமல் எங்கள்மீது தெளித்துக்கொண்டிருந்தான்; குளக்கரை பூமெத்தையிலே உட்கார்ந்தோம்; சிறிது நேரத்திற்கெல்லாம் எங்கள் உடம்பைப் பூக்கள் மொய்த்துக் கொண்டன. உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்த நாங்கள் அப்படியே உறங்கிவிட்டோம்.

யாரோ என்னைத் தட்டி எழுப்பினார்கள்; திடுக்கிட்டு எழுந்தேன்; விடிந்துவிட்டது. என் முன்னே சுரேஷ் நின்றான்; என் கன்னத்தில் 'பளீர் பளீர்' என்று நாலைந்து அறை வைத்தான்; "அடிக்காதீர்கள்!" என்று அழுதுகொண்டே சுரேஷ் தாள்பணிந்து நின்றாள் ஆஷா.

ஆனால், சுரேஷ், ஆஷாவை இழுத்துச் சென்று வீட்டிலே பூட்டினான்; என்னை வீட்டைவிட்டுத் துரத்தினான்; ஆனால் என் காதலை யாராலும் துரத்த முடியவில்லை.

என் கால்கள் என்ன சுகத்தைக் கண்டனவோ எனக்குத் தெரியாது; ஆஷா வீட்டை நோக்கி என் கால்கள் நடந்தன; உறக்கமில்லாத என் உள்ளம் ஆஷா வீட்டைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தது.

"மாட்டாயா? வரமாட்டாயா? வந்து உன் வண்ண முகத்தைக் காட்டமாட்டாயா? ஆஷா!" இப்படி என் வாய் பாட ஆரம்பித்தது. மாடி ஜன்னல்கதவு திறந்தது. பைங்கிளியைப்போல் இறக்கை ஒடிந்து நின்று கொண்டிருந்தாள் ஆஷா! நான் மேலே ஏறினேன்.

"ஆஷா! நீ இல்லாமல் இந்த உலகமே இல்லை. என்னோடு வந்துவிடு. எங்காவது போய் இன்பமாக வாழலாம்! எதற்கும் யோசிக்காதே! நீ என் காதலி! நான் உன் காதலன்! நீ மறந்தால்.....அல்லது என்னைத் துறந்தால்...நான் இறக்கவேண்டியதுதான். ஆஷா! புறப்படு சீக்கிரம்" இப்படி நான் சொன்னதும் என் ஆஷா தயாராகிவிட்டாள்; இருவரும் புறப்பட ஆயத்தமானோம். ஆனால், சுரேஷ் கையிலே துப்பாக்கியோடு வந்து எனக்கு முன்னால் நின்றான்; என்னைச் சுட்டுவிடுவேன் என்று சொன்னான். என் ஆஷா எனக்குமுன் வந்தாள்.

"அவர் என் காதலன்! அவரைச்சுட உனக்கு உரிமையில்லை! நான் உன் தங்கை; என்னைச் சுடு!" இப்படி ஆத்திரமாகப் பேசினாள் ஆஷா! சுரேஷ் கோபம் தணிந்தது. துப்பாக்கியைக் கீழே போட்டான்.

"ஆஷா! நீங்கள் காதலராக இருங்கள்! ஆனல் கணேஷ் பணம் சம்பாதித்துக்கொண்டு வரவேண்டும். அதன் பின்தான் கல்யாணம்."

சுரேஷ் கூறியவை எனக்கு ஆறுதல் அளித்தது. காதலிக்காக காட்டிலே சென்று புலி நகம் கொண்டு வந்ததாக ஏட்டிலே நான் படித்திருந்தேன். பணம் சம்பாதித்துவிட்டு வந்து ஆஷாவை மணம் புரிவது தான் சரி என்று முடிவு செய்துவிட்டு வெளியேறி னேன்.

வேலைக்காக நான் அலையாத இடமில்லை. பிச்சை எடுப்போமா என்று எண்ணம் ஏற்படும் அளவுக்கு, பசியும் பட்டினியும் என்னை வாட்டியது. தள்ளாடி நான் செல்லும்போது ஒரு தளிர்மேனியாள் என்மீது காரை ஏற்றிவிட்டாள்.

விழித்துப் பார்த்தேன், நான் அவள் வீட்டில் கட்டிலில் கிடந்தேன்; என் பக்கத்திலே டாக்டரும் அவளும் இருந்தார்கள். 'லதா' என்று சொல்லிக் கொண்டே ஒரு வாலிபன் அங்கு வந்தான். என்னைப் பார்த்துவிட்டு, "யார் இவன்? ஆஸ்பத்திரியில் சேர்க் கிறதுக்கென்ன?" என்று கேள்விகளைப் போட்டான். 'ஷட்அப்' என்ற ஒரு பேச்சில் அவனை வெளியே போகும்படி செய்தாள் லதா.

நான் குணமடைந்தபின் என்னை அங்கேயே வேலைபார்க்கச் சொன்னுள். நான் ஆனந்தத்தில் மூழ்கிப் போனேன். ஆனல் அதே இரவில் லதா என் படுக்கையறைக்கு வந்தாள். என்னைக் காதலிப்பதாகச் சொன்னுள்; நான் ஆஷா கதையைச் சொன்னேன்; உடனே லதா போய்விட்டாள். ஆனல்......

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் லதாவால் வெளியேற்றப்பட்ட அவன் வந்தான்; என்னைத் திட்டிக்கொண்டே உதைக்க ஆரம்பித்தான்; நானும் சண்டை போட்டேன்; முடிவில் ரிவால்வார் எடுத்து என்னைச் சுட குறி வைத்தான்; 'டபார்' என்ற சப்தம் கேட்டது; லதா என் முன் வீழ்ந்து கிடந்தாள்.

என்னைக் கைதுசெய்து கோர்ட்டிலே நிறுத்தினார்கள்; சட்டம் என்னைச் 'கொலைகாரன்' என்றது; தீர்ப்பு எனக்கு ஆயுள் தண்டனை என்று கூறப்பட்டது. சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தேன்.

இதுதான் கணேஷ் கூறிய கதை.

ஆயுள் கைதி என்றால் முன்பெல்லாம் அந்தமான் தீவுக்கு அனுப்பிவிடுவார்கள். ஆனல் இப்போது? குறைந்தது 14 வருஷமாவது சிறையிலே இருக்க நேரிடும். அப்படி இருக்க கணேஷ் ஆஷாவை அடைய முடியுமா? அல்லது அவள் அழகு முகத்தை கணேஷ் பார்க்கத்தான் முடியுமா?

"நிச்சயமாக முடியும்" என்று கைதிகள் சொன்னார்கள். நாளை ஜெயிலருக்குக் கல்யாணம்! வார்டர்கள் பார்வை எல்லாம் ஜெயிலர் வீட்டில் இருக்கும். தப்பிப் போகவேண்டிய ஏற்பாடுகளை பகலிலேயே செய்துவிடலாம் என்று கைதிகள் மகாநாட்டிலே தீர்மானம் ஏகமானதாக நிறைவேறியது. தப்பிப் போனலும் என்றாவது ஒரு நாள் பிடிபட்டுத்தானே ஆகவேண்டும்? இதனல்தானே என்னவோ கணேஷ்

தப்பிப் போக விரும்பவில்லை. ஆனால் கைதிகளின் தீர்மானத்தைக் கணேஷின் காதல் மட்டும் ஒப்புக் கொண்டது.

மறுநாள் காலையில் ஜெயிலர் வீட்டில் மேள தாளம் முழங்கியது; கைதிகள் அந்தக் கல்யாணக் காட்சியைக் காண முடியவில்லையே தவிர, காது குளிரக் கேட்டனர். "எனக்கும் ஆஷாவுக்கும் கல்யாணம் நடந்தால்...?" கணேஷ் கற்பனை செய்ய ஆரம்பித்தான்.

ஆனால் உண்மையிலேயே ஆஷாவுக்கும் ஜெயிலருக்கும் கல்யாணம் நடந்துகொண்டிருந்தது. இல்லாததையும் பொல்லாததையும் காட்டுகிற கண்ணாடிதானே கற்பனை! ஜெயிலர் ஆஷாவுக்கு மாலை போடுகிற காட்சி கற்பனை லோகத்திலே இருக்கிற கணேஷுக்குத் தெரியவா போகிறது?

அன்றிரவு பள்ளியறையிலே பதுங்கி இருக்கும் மான்போல ஆஷா நின்றுகொண்டிருந்தாள்; ஜெயிலர் உள்ளே வந்தார்; 'ஆஷா' என்று அன்பாக அழைத்தார். ஆனால்.......

ஜெயில் 'சைரன்' கதற ஆரம்பித்தது. அபாயத்தின் அலறல்தான் சைரன். சைரன் சத்தம் கேட்ட சாதாரண வார்டரிலிருந்து சூப்ரெண்ட்வரை உள்ளவர்கள் ஜெயிலுக்கு வந்துவிட வேண்டும் என்பது சட்டம். ஜெயிலருக்கு மட்டும் விதிவிலக்கா? அவரும் ஜெயிலுக்கு ஓடிவந்தார்.

அப்போது கைதிகளுக்கும் வார்டர்களுக்கும் கை கலப்பு நடந்துகொண்டிருந்தது. அதிலே ஒரு கைதி வார்டர் கையிலே இருந்த துப்பாக்கியைப் பறித்து விட்டான், மணக்கோலத்தில் ஓடிவந்த ஜெயிலருக்குக் குறிவைத்தான். ஆனால், மனமிரங்கிய கணேஷ் கைதி சுடாதபடி தடுத்துவிட்டான்.

கொஞ்ச நேரத்தில் புயல் அடங்கியது; கைதிகள் பிடிபட்டனர்; எல்லா கைதிகளும் கணேஷை உதைக்க வேண்டும் என்று முடிவு கட்டினார்கள். ஆனால் ஜெயிலர் உத்தமக் கைதி என்று அவனைப் பாராட்டினர்; அவன் கதையை அவரும் கேட்டார்; நிரபராதிக்கு ஆயுள் தண்டனையா என்று அவரும் வருத்தப்பட்டார். நான் இருக்கிற வரைக்கும் இந்த ஜெயிலில் உனக்கு ஒரு கவலையும் இருக்காது என்று ஜெயிலர் சொன்னார்.

ஒருநாள் ஜெயிலுக்கு வெளியே உள்ள தோட்டத்தில் கணேஷ் வேலை செய்துகொண்டிருந்தான். அப்போது தன் வீட்டு மாடியில் இருந்து ஜெயிலர் கணேஷைப் பார்த்துவிட்டு, தன் மனைவியைக் கூப்பிட்டு, "அதோ அந்தக் கைதிதான் என் உயிரைக் காப்பாற்றியவன்" என்று சொன்னார்.

"ஆ! கைதியாக, இருப்பது என்காதலன் கணேஷா? ஐயோ! இந்த நிலைக்கு வரத்தானா ஊரை விட்டுச் சென்றார்?" இப்படி ஆஷா அலறவில்லை; மனதிற்குள் நினைத்தாள். மறுகணம் கணேஷை

அழைத்துவர ஜெயிலர் ஆள் அனுப்பினன்; ஆஷா வேண்டாமென்று தடுத்தாள்.

"ஏன்? என் உயிரைக் காத்த உத்தமனை நீ பார்க்க வேண்டாமா?"

"அவனே கொலை செய்த கைதி! அவனை நான் ஏன் பார்க்கவேண்டும்?"

அதற்குள் கணேஷ் அங்கு வந்துவிட்டான்; ஆஷா 'சட்' என திரும்பிக்கொண்டாள்.

"கணேஷ் நீ கொலைகாரன் என்று என் மனைவி சொல்கிறாள்! இதோ பார்! உன் காதலியின் பெயர் ஆஷாதானே?"

"ஆம்! ஆஷாதான்!"

"என் மனைவியின் பெயரும் ஆஷாதான்! உன் காதலியின் ஊர்தான் இந்த ஆஷாவுக்கும்."

அப்போது ஆஷாவின் கண்களிலே கண்ணீர் பெருகியது; இதை ஜெயிலர் கவனித்திருப்பான்! ஆனல் அப்போது ஜெயிலரைச் சூப்ரெண்ட் அழைப்பதாகச் செய்தி வந்துவிட்டது. "ஆஷா நீ பேசிக் கொண்டிரு! சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லி விட்டு ஜெயிலர் சென்றான். ஆஷாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"அம்மா! என் ஆஷாவை உங்களுக்குத் தெரியுமா?"

"நன்ருகத் தெரியும்! அவள் எனக்கு ரொம்ப வேண்டியவள்!"

" அவள் இப்போது எங்கு இருக்கிறாள்? அவளை நான் பார்க்க முடியுமா?"

" முடியவே முடியாது! அவள் உனக்குக் கிடைக்க மாட்டாள்."

இப்படிச் சொன்னதும் ஆஷா எழுந்து போய் விட்டாள். " ஆஷா ஆஷா!" என்று கதறிக்கொண்டே பைத்தியம் பிடித்தவனைப்போல் கணேஷ் ஓடினான்....

கணேஷின் பரிதாப நிலையைக் கண்ட ஜெயிலர், தன் மனைவியிடம் கோபித்துக் கொண்டான். ஆஷாவை எப்படியாவது ஒருநாள் கூட்டி வந்து கணேஷுக்குக் காட்ட வேண்டுமென்று தன் மனைவியை ஜெயிலர் கேட்டுக் கொண்டான். முதலில் மறுத்த ஆஷா முடிவில் ஒப்புக்கொண்டாள்.

அன்று காலை 10 மணி இருக்கும். ஜெயில் தோட்டத்தில் கணேஷ் கட்டையை வெட்டிக் கொண்டிருந்தான்; அங்குதான் ஆஷாவைச் சந்திக்க ஜெயிலர் ஏற்பாடு செய்திருந்தார். ஆஷாவும் வந்தாள். 'ஆஷா' என்று சொல்லிக்கொண்டே கணேஷ் ஓடிவந்தான்; ஆஷாவும் ஓடிவந்தாள்.

" நில்! நீ இன்னொருத்தன் மனைவி! கணேஷைத் தீண்டாதே!" ஆஷாவின் மனச்சாட்சி இப்படிக் கட்டளை யிட்டது. அப்படியே நின்றுவிட்டாள்; அதற்குள் அங்கே ஜெயிலர் வந்து கொண்டிருந்தார்; ஆஷாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திடீ

றென்று தோட்டத்துப் பக்கம் திரும்பி வீட்டிற்குள் சென்றுவிட்டாள் ஆஷா. "கணேஷ் காதலியை நான் பார்க்கக் கூடாதா?" என்று ஜெயிலர் கேட்க, "அடுத்தவன் காதலியை நீங்கள் ஏன் பார்க்கவேண்டும்?" என்று தந்திரமாகச் சொல்லி வைத்தாள் ஆஷா.

ஆனல் ஒரு நாள் ஜெயிலர் வீட்டில் இல்லை. ஆஷாவைப் பற்றி இன்னும் விசாரிக்க வேண்டும் என்ற ஆவலில் கணேஷ் வந்தான்; எதிர்பாராதவிதமாக ஆஷா எதிர்ப்பட்டு விட்டாள்.

"நீயா? என் ஆஷா ஜெயிலர் மனைவியா? அடி துரோகி! காதலை மறந்தாயா? நீயும் நானும் புருஷன் மனைவி என்று சொன்னயே! அதெல்லாம் வேஷந்தான?"

"கணேஷ்! நான் சொல்வதைக் கேள். நான் உனக்காகவே வாழ்ந்தேன்; இப்போது நீ இல்லாமல் பிணமாக வாழ்கிறேன்! சமூகச் சூழ்ச்சி எங்களை சதிபதியாக்கியது, நான் நிரபராதி" இப்படி ஆஷா சொன்னள்; கணேஷ் விடவில்லை. உண்மையிலேயே பைத்தியக்காரனுனன். ஆஷா மாடிப் படிக்கட்டுகளிலே ஏறிக் கொண்டிருந்தாள்.

"அடி, ஆஷா! உண்மையிலே நான் கொலைகாரனல்ல! ஆனல் இப்போது கொலைகாரனகப் போகிறேன், என் காதலி ஆஷாவோடு கலந்து வாழப் போகிறேன்!" இப்படி கணேஷ் கூறிக் கொண்டிருக்கும்போது 'படபட' என்று சப்தம் கேட்டது. மாடிப்

படிகளிலே உருண்டு கொண்டிருந்தான் கணேஷ். 'ஐயோ! கணேஷ்' என்று ஆஷா அலறினாள் ஆனால்........

கைதியாக இருந்த கணேஷ் விடுதலை அடைந்தான். காதல், சாதல் பரிசளித்தது. உயிர்த் தோழன் கணேஷுக்கு ஜெயிலர் சமாதி கட்டினான். ஆஷா என்ற நடைப் பிணமும் அந்தச் சமாதிப் பிணத்தண்டைதான் சதா அலைந்து கொண்டிருந்தது.

# நடைப் பிணம்

## 1 காதல் கடல்

தைத் திருநாள்! தமிழர்களுக்கு நல்ல நாள்! பொங்கல் விழா தமிழர் வாழும் மேதினி எங்கும் புனித விழாவாகக் கருதப்பட்டது. கோலாகலம்! கொண்டாட்டம்! கும்மாளம்! மக்களிடத்திலே மகிழ்ச்சி.

ஆனால், நாகராஜனிடத்தில்?

மகிழ்ச்சி அல்ல, மனவேதனை! இன்பமல்ல, துன்பம்! கோலாகலமல்ல, அலங்கோலம்! கொண்டாட்ட மல்ல, திண்டாட்டம்! சோபிதமல்ல, சோகம்! கும்மாளமல்ல, குடலைப்புரட்டுவதுபோல் உள்ளத்திலே நினைவுச் சுழல்! புயல்! கொந்தளிப்பு! எரிமலை!

ஏன்?

இதே பொங்கல்விழா ஐந்து வருடங்களுக்கு முன் அவனுக்குத் தந்த ஆனந்தம் கொஞ்சமா? பேரானந்தம்! பரமானந்தம்!

"தை பிறந்தால் வழிப் பிறக்கும்! இந்தப் பழமொழிஎன் மட்டில் பலித்துவிட்டது. என் வாழ்க்கை வளம்பெற, கனிமொழியாளை—காதல் கிளியாளை.......

ஏன் என் இன்பக் கிழத்தியைக் கண்டுவிட்டேன்! இனி இன்ப வாழ்க்கை! மோட்ச வாழ்க்கை!" இப்படி இன்பக் கோட்டை கட்டினன் நாகராஜன், ஐந்து வருடங்களுக்கு முன் தைத் திருநாளில்!

ஆனல், இன்று?

அத்தனையும் தகர்ந்துவிட்டது! மனக்கோட்டை, கானல் காட்சியாகிவிட்டது! நினைப்பெல்லாம் நெருப் பாகிவிட்டது! மணவாழ்க்கை பிண வாழ்க்கையாகி விட்டது!

காரணம் என்ன!

நாகராஜனை வறுமை சூழ்ந்து கொண்டதா? இல்லை! வற்றாத செல்வம் இன்னும் இருக்கிறது.

பெரும் வியாதி பீடிக்கப்பட்டு மூப்படைந்து விட்டானு?

இல்லவே இல்லை! இளைஞன் என்ற பட்டம் இன்னும் மாறவில்லை. திடகாத்திரமானவன் என்ப தற்கு அவனது திரண்ட தோள்களே சாட்சியா யிருந்தன.

காதல் கைகூடவில்லையா?

காதல் கைகூடுமா, கூடாதா? என்ற கவலை இன்றல்ல, ஐந்து வருடங்களுக்கு முன் அவனுக்கு இருந்தது. நாயகியைப் பொதுமேடையிலே பிரசங்கம்

செய்யும்போது கண்டு, கண்ணால் காதல்மொழி பேசும் போது இருக்கத்தான் செய்தது.

ஆனால்—ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த பொங்கல் திருநாளிலே—நாயகியைச் சந்தித்துத் தன் கருத்தைத் தெரிவித்தும்........அந்தக் காதல் கவலையும் தீர்ந்தது.

"நாகு! நான் மனப்பூர்வமாக காதலிக்கிறேன். உயிருள்ளவரை உங்கள் நினைவு மாறாது! நீங்கள் என் காதலைப் புறக்கணித்தால்கூட, நான் இன்னொருவனுக்குக் கட்டாயப் படுத்தப்பட்டு, வாழ்க்கைப்பட்டால் கூட, சாகும்போது 'நாகு' என்று சொல்லிக் கொண்டுதான் சாவேன்!"

இப்படி நாகராஜனிடம் நாயகி சொல்லும்போது இன்பத்திற்கு எல்லை ஏது? தான் காதல் தெய்வமாக நினைத்த நாயகி வாயில் இருந்து வந்த வார்த்தைகள்.... அத்தனையும் தேன் துளிகள்! ஒரே தித்திப்பு! இந்த நினைப்பு நாகராஜனை எந்த லோகத்திற்கோ இழுத்துச் சென்றது.

* * * *

அன்று நாகராஜனுக்கு மூன்றுபரிசுகள் வந்தன. ஒன்று வாழ்த்துரை! இரண்டாவது வெண்பொங்கல்! மூன்றாவது கரும்பு! யார் அனுப்பி யிருக்க முடியும்? சாட்சாத் நாயகியேதான். இந்த நிகழ்ச்சி அவன் மனதிலே புத்துணர்ச்சியை ஊட்டியது, அந்த பொங்கல் நாளில்.

ஆனல்—இன்று

கரும்பு வேம்பாகிவிட்டது! புத்துணர்ச்சி ஈட்டி குத்தும் உணர்ச்சியாக மாறி, வாட்டி வதைத்தது.

காதலுக்காகக் கவலைப்பட்ட நாகராஜன், காதல் உள்ளம் என்பது கபடர்கள் நடமாடும் உலகம் என்று வர்ணித்தான்.

பொன்னையும் பெண்ணையும் கண்ணால்கூட தீண்டேன் என்று கடும் விரதம் கொண்டான். பணக்கார நாகராஜன் பராரியானன்! மேடைப் பிரசங்கி நாகராஜன் அடையாளம் தெரியாத நடைப்பிண மானன்! இருந்த இடத்தை வேண்டுமென்றே துறந்தான்! அரசியல் வாழ்க்கையிலிருந்து 'அஞ்ஞாதவாசம்' பெற்றன்.

## 2. நாகராஜன்

நாகராஜன் அவ்வளவு அழகனல்ல; ஆனல் அந்தஸ்து உள்ள குடும்பத்திலே பிறந்தவன், தாயோ தந்தையோ இல்லாத தனிக்கட்டையாக இருந்தான்.

அவன் ஆஸ்தி பூஸ்தி எல்லாம் லட்ச ரூபாய்வரை இருந்தது. அவன் லட்சாதிபதியாக இருந்தும்........ பணக்காரர்களுக்குள்ள படாடோப லட்சணம் எதுவும் அவனிடம் இருந்ததில்லை.

தன் கையால் நூற்ற கதர் கட்டுவதே ஒரு மகத்தான காரியம் என்று கருதினன். எளிய வாழ்க்கை நடத்தினன், ஏழையைவிட மோசமாக மகாத்மாவின் சீடன் என்று சொல்லிக்கொள்வதிலே......அவனுக்கு ஒரு தனி ஆனந்தம்.

அவன் உயர்நிலைப் பள்ளியிலே படிக்கும்போதே காந்திய கொள்கையால் கவரப்பட்டிருந்தான். தேசிய திட்டத்தை பின்பற்றவும் பள்ளிக்கூடத்திலே தீவிரமாகப் பரப்பவும், நாகராஜன் பின்வாங்கியதே இல்லை.

இதன்பயனுக ஒரு சமயம் அவன் பள்ளியிலிருந்தே 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டான். ஆனல் அவன் தோழர்களின் கட்டுப்பாடான 'ஸ்டிரைக்' அவனை மீண்டும் பள்ளிக்கூடத்திலே சேர்த்தது.

இந்த சமயத்தில்தான் எஞ்சியிருந்த அவன் தாயும் பத்துநாள் படுக்கையி லிருந்துவிட்டு 'பரலோக யாத்திரை' சென்ருள்.

அதோடு பள்ளிப் படிப்பை அவன் நிறுத்திவிடவில்லை. காலேஜிலே சேர்ந்து படிக்க ஆரம்பித்தான். கல்லூரியிலே 'இண்டர்' படித்து முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான்.

அதற்குமேல் படிக்க அவனுக்கு ஆர்வம் இல்லாமல் போயிற்று. நாட்டுக்குத் தீவிர தொண்டு செய்ய திட்டம் போட்டான். தேசிய இயக்கத்திற்கு அவ்வப்போது தேவைப்பட்ட பணத்தை நூறு, ஆயிரமாக கொடுத்து பலப்படுத்தி வந்தான். உள்ளூர் தேசிய

இயக்கத்தின் 'தலைவர்' பதவியும் அவனுக்குக் கிடைத்தது.

இந்தப் பதவி அவனுக்கு மேலும்மேலும் உணர்ச்சியை ஊட்டுவதாய் இருந்தது. 'பேச்சாளி' ஆகவேண்டும் என்ற ஆசை அவனுக்கு நாளுக்குநாள் வளர்ந்தது.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள். இதோடு பணமும் இருந்தால்? கேட்கவா வேண்டும், பாதையில்லா ஊருக்குப் பாலமே அமைத்துவிடலாம்! அப்படியிருக்க நாகராஜன் ஆசை வீண்போகுமா?

சிறந்த பேச்சாளர்கள் பட்டியலிலே நாகராஜனுக்கும் ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. மாகாணம் பூராவும் மக்களிடத்திலே அவனுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

அவன் ஊர்ஊராகச் சொற்பொழிவு செய்ய வந்த இடத்தில்தான் நாயகியைக் கண்டான்; காதல் கொண்டான்; காதல் கைகூடுமா என்று கவலைப்பட்டான்; பல இடங்களிலே நாகராஜனும் நாயகியும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இருவர் காதலும் நாளுக்குநாள் வளர்ந்தது.

நாயகியை சந்திப்பதிலே எப்போதாவது ஏமாற்றம் ஏற்பட்டால்.....ஏக்கத்திற்கு எல்லையே இருக்காது. காதல் என்ன இலேசானதா? சிந்தனையைக் கெடுத்து சிறுகச் சிறுக சித்திரவதை செய்து, மனிதனைப் பைத்தியமாக்கி, பிணமாக்கும் மகாசக்தி காதலைத்தவிர வேறு எதற்கு உண்டு?

ஆனல், அந்த நிலையெல்லாம் நாகராஜனுக்கு வரவில்லை. தன் உள்ளத் துடிப்பையெல்லாம் கடிதத்திலே எழுதி நீட்டிவிட்டான்; நாயகியும் நல்ல பதிலையே கொடுத்தாள். அதன் பின்னர்தான் இருவரின் இன்பச் சந்திப்பு. அந்த சந்திப்பிலேதான் ஒருவரை ஒருவர் கருத்தை யறிந்து....கட்டி அணைத்துக்கொண்டனர். அந்த சுகத்தை....என்றுமே மறக்க முடியாது.

இவர்கள் காதல் அடுத்து உள்ளவர்களுக்கும் தெரிய ஆரம்பித்தது தெளிவுள்ள நெஞ்சம் நாகராஜனுக்கு இருக்கும்போது யாருக்குத் தெரிந்தால் என்ன? காதல் திருமணம் செய்துகொள்ள காதலர்கள் முடிவு செய்தனர்.

ஐந்தாண்டுகளுக்கு முன்வந்த தைத் திருநாளில்-பொங்கல் புதுநாளில் நாகராஜனுக்கும் நாயகிக்கும் கதர்த் திருமணம் சீர்திருத்த முறையிலே நடந்தேறியது. மிஸ் நாய்கி, மிஸஸ் நாகராஜனுக மாறினள்.

## 3. நாயகி

நாயகியும் சாதாரண ஆளல்ல. பி. ஏ. படித்தவள்; படிக்கும்போதே தேசீய இயக்கத்திலே நாகராஜனைப் போல் பங்கு பெற்றிருந்தாள். பி. ஏ. பட்டம் பெற்ற உடனே, நாயகி படிப்பை நிறுத்திவிடவில்லை. பி.எல். படிக்கவும் ஆரம்பித்தாள். பி. எல். முடிக்கிறவரை

யிலும் தீவிரமாக அரசியலிலே பிரசாரம் செய்து வந்தாள்.

பொதுவாக அரசியலிலே பெண்கள் அதிகமாகப் பங்கு பெறுவதில்லை; அதற்குக் காரணம் பலபல இருந்தன. அரசியல் சினிமா, நாடகம் போன்ற பொதுத் துறையிலே ஈடுபடுகிற பெண்கள் ஒழுக்கத்தோடு வாழ்க்கை நடத்தினலும் அவள் அப்படிப் பட்டவள் இப்படிப்பட்டவள் என்று 'கயிறு' திரிக்கப் பலர் இருந்தனர்.

அதுமட்டுமல்ல, இப்படித் துணிந்து வருகிற பெண்களைக் கெடுக்க, வலைவீச கூடச் சேர்ந்தவர்களே முயற்சி செய்வதும் சில இடங்களிலே சர்வ சாதாரண மான விஷயமாகிவிட்டது. இதனுல்தான் எத்தனையோ பெண்களுக்கு பொதுவாழ்வில் ஈடுபட ஆசையிருந்தும் அது கனவாகிவிடுகிறது.

பொதுவாக அரசியலிலே மட்டுமல்ல, ஆண் பெண் சந்திக்க வசதி உள்ள எந்த இடத்திலும் ஒழுக்கக் குறைவு ஏற்படத்தான் செய்கிறது. ஆலயமும் திரு விழாவும் புனிதமானதுதான்....அங்கே ஆண் பெண் சேர்க்கை ஏற்படுவதில்லையா? எல்லாம் சூழ்நிலையைப் பொருத்ததுதான்.

மனிதனின் வாழ்வும் தாழ்வும் சூழ்நிலையை ஒட்டித்தான் இருக்கிறது. இதைத்தான் 'ஆண்டவன்

அருள்' என்றும் 'விதி' என்றும் வைதீகர்கள் கூறு கிறார்கள்.

பஞ்சுக்குத் தன்னைத்தானே பற்றிக்கொள்ளும் சக்தி கிடையாது. ஆனால் நெருப்போடு சேரும் போது......எரிவது மட்டுமல்ல, இருக்கிற இடம் தெரி யாமல் ஒரு நொடியில், மடிந்து மறைந்துவிடும்! இதைப் போலத்தான் ஆணும் பெண்ணும்! பருவம் என்ற புயல் வீசும்போது........சாதாரண பஞ்சு என்ன செய்ய முடியும்?

அரசியலிலே ஈடுபட்ட நாயகியை நாகராஜன் பல இடங்களிலே சந்திக்க நேரிட்டது. சில ஊர்களிலே இருவரும் சேர்ந்து ஓரிடத்திலேயே தூங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையிலே இருவருக் கும் காதல் ஏற்பட்டது ஆச்சரியமா? காதல் கைகூடி கல்யாணம் நடந்ததுதான் ஆச்சரியம்!

நாயகிக்கு அரசியலிலே நல்ல ஆதரவு இருக்கத் தான் செய்தது. நாயகி பேசுகிற கூட்டத்திலே ஆயி ரம்பேர் அதிகமாகக் கூடுவதோடு நில்லாமல், பெண் களும் ஏராளமாகக் கூட்டத்திற்கு வர ஆரம்பித்தனர்.

"நாயகி துணிச்சல்காரிதான்" கூட்டத்திற்கு வரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இப்படி வியப் புடன் கூறினர். கொஞ்சமும் கூச்சமோ, பயமோ, வெட்கமோ எதுவுமின்றி விஷயங்களைப் பேசினாள். சுருக்கமாகச் சொன்னால் பெண்களுக்குத் தேவையான நான்கு குணங்கள் நாயகியிடத்திலே கிடையாதோ என்று சந்தேகிக்க வேண்டியதாக இருந்தது.

உள்ளபடியே நாயகி இன்று நேற்றல்ல, கல்லூரியிலே படிக்கும்போதே 'வாயாடி' என்ற பட்டம் பெற்றவள். 'சோசியல்' என்ற வார்த்தையை வாழ்க்கையிலே அப்படியே கடைப்பிடித்தவள்.

கல்லூரி மாணவர்களிடம் பழகுவதற்கோ, பேசுவதற்கோ, சினிமா பீச் போன்ற இடங்களுக்கு அவர்களுடன் செல்வதற்கோ நாயகி பின்வாங்கியதே இல்லை. இன்று ஒருவனோடு, நாளை இன்னொருவனோடு என்றபடி சதா 'குஷி'யாக இருப்பாள் நாயகி.

கல்லூரி மாணவர்கள்தான் குறும்புக்காரர்களாயிற்றே! 'வாயாடி' என்ற பட்டத்தோடு 'கலியுக பாஞ்சாலி' என்ற புதுப் பட்டத்தையும் சூட்டினார்கள். இந்தப் பட்டத்திற்கெல்லாம் நாயகி பயந்துவிடவில்லை. "ஆணுக்கு இங்கு பெண் இளைப்பில்லை காண்" என்று ஆணவமாகக் கூறினாள்.

அந்த நாயகிதான் அரசியலில் 'அவதாரம்' எடுத்தாள்; முழங்கினாள்; கர்ஜித்தாள்; நாகராஜனின் நாயகியாக, மனைவியாக மாறினாள், ஊரும் நாடும் அறியும்படி.

## 4. நாகராஜனும் நாயகியும்

*நாகராஜன்—நாயகி திருமணத்திற்கு நாலா பக்கத்திலிருந்தும் நண்பர்கள் வந்திருந்தார்கள். வாழ்த்துத் தந்திகள் நூற்றுக்கணக்காக வந்திருந்தன. இந்தத் திருமணத்தைப் பற்றி பிரமாதமாக எழுதப் பட்டிருந்தன பத்திரிகைகளில்.*

*பரிசாக வந்த புத்தகங்களுக்கும், வெள்ளிச் சாமான்களுக்கும் கணக்குப் பார்த்தால் ஐயாயிரம் ரூபாய் மதிப்பிடலாம். நாகராஜனுக்கு வந்த பரிசுகளை விட நாயகிக்குத்தான் அதிகமாக வந்தன; அதிலே பெண் நண்பர்கள்கூட குறைச்சல்தான்; நாயகிக்கு ஆண் நண்பர்கள்தான் அநேகர் இருந்தனர். அவர்கள் அளித்த பரிசுப் புத்தகங்கள் பெரும்பாலும் ஆண் பெண் உறவைத் தெளிவுபடுத்தும் 'செக்ஸ்' (Sex) சம்பந்தப்பட்டவைகளாக இருந்தன.*

*இதுமட்டுமா? கல்யாணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே நாயகி பி. ஏ., பி. எல். ஆகி வக்கீல் தொழிலை ஆரம்பித்திருந்தாள். கட்சிக்காரர்கள் பரிசுகளுக்கும் கணக்கு வழக்கில்லாமல் இருந்தது.*

*இவைகளைக் கண்டு நாகராஜனே மலைத்து விட்டான். நாயகிக்கு இவ்வளவு சிநேகிதம் ஊர் ஊருக்கு இருக்குமென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.*

கல்யாணமான இரண்டொரு வாரத்திலேயே நாக ராஜனுக்கு வாழ்க்கையில் ஏமாற்றம் தோன்ற ஆரம் பித்தது.

'முதல் இரவு' முடிந்த மறுநாள் நாயகி ஊரிலே இருக்கவில்லை. தேச சேவை செய்ய வெளியூர் போய் விட்டாள், நாகராஜனுக்கு ஒரே கோபம். ஆனல்— நாயகிக்கு நல்ல புகழ்! வாழ்க்கையின் சுகத்தையே விட்டுவிட்டு சேவை செய்ய வந்துவிட்டாள், சேவகி! அவள் ஒப்பற்ற தியாகி! இப்படிச் சிலர் கூறினர்.

ஆனல்..........

நாகராஜனுக்கு இந்தப் போலி தியாக மெல்லாம் பிடிக்கவில்லை. நாயகியைக் கட்டுப்படுத்த நினைத்தான். கூட்டங்களுக்குச் செல்வதாய் இருந்தால் என் கூடத் தான் வரவேண்டும்; மற்றபடி கூட்டங்களுக்குப் போகக்கூடாது என்று கட்டளையிடவில்லை, நயமாகச் சொன்னன்.

நளினமாகப் பேச நங்கையர்களுக்கு, குறிப்பாக நாயகிக்குத் தெரியாதா?

"என்ன இப்படி பேசுகிறீர்கள்? பொதுநலவாதி பேசுகிற பேச்சா இது? என்கூட தாங்கள் இல்லாவிட் டாலும் என் தந்தை தங்கராயர் இருக்கிறார் அல்லவா?"

இந்த சமாதானத்தைக் கேட்ட நாகராஜன் எது வுமே பேச முடியவில்லை. அப்பாவும் மகளும் சேர்ந்து

செய்யும் அரும்பணியை அரசியல்வாதி நாகராஜன் ஆட்சேபித்தால்........உலகம் சிரிக்காதா?

"நாயகியின் தந்தையா தங்கராயர்? தங்கராயரால் சுவீகாரம் செய்யப்பட்டவள்தானே நாயகி? அப்படியிருக்க தங்கராயர் பிறபுருஷனே தவிர, பெற்ற தகப்பனல்ல!" இந்த எண்ணம் நாகராஜன் மனதில் இருந்து என்ன பயன்? மெல்லவும் விழுங்கவும் முடியாமல் விழித்தான். கட்டிய மனைவி சதா சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டு எட்டியே இருப்பதைக் கண்டு வருந்தினன்; வாடினன்.

இந்த வேதனையின் காரணமாகத்தான் அரசியலில் அதிகமாக ஈடுபடுவதை நிறுத்தினன். ஆடிக் கொரு தரம் அமாவாசைக் கொருதரம் என்பதைப்போல எப்போதாவது எங்காவது கட்டாயத்தின்பேரிலே செல்வான்.

அப்படி அவன் சென்றுகொண்டிருந்த போது ஒரு செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டான். மனம் பதறினன். காற்றுவாக்கிலே வந்த செய்திதான் அது; ஆனல் கர்ண கொடூரமானது! வதந்திதான்; ஆனல் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியது.

"ஏண்டா! தங்கராயரும் நாயகியும் என்னதான் 'அப்பா மகள்' என்றாலும்........தங்கராயர் மடியிலே நாயகி கிடப்பதும்........ஒரே கட்டிலில் இருவரும் படுப்பதும்........சேச்சே........பிரசங்கம் செய்யவந்த இடத்தில் இந்த லீலாவிநோதமா?"

இந்தச் செய்தி நாகராஜனுக்கு அதிர்ச்சியாக இருந்தது; பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. இந்த உண்மையை எப்படி அறிவது? அதுவும் காற்று வாக்கிலே வரத்தான் செய்தது.

இந்த நாயகியை 'தத்து' எடுத்தவன் தங்கராயர்; படிக்கவைத்து வளர்த்தவன் அவன்தான். நாயகி பருவமடைந்ததும் வீட்டோடு அவளை வைத்துக்கொண்டு தந்தை—மகள் நாடகம் நடத்தியவன்தான் தங்கராயர். உண்மையிலே தங்கராயரும் நாயகியும் அந்தரங்கக் காதலர்கள். பன்னிரண்டாவது வயதிலேயே நாயகியைக் கெடுத்துவிட்டானும் பாவி!

இவ்வளவு அறிந்த பின்னும் மானமுள்ளவன் சும்மா இருப்பானா? பொதுக் கூட்டங்களுக்கே போகக் கூடாது என்று உத்தரவு போட்டான். தங்கராயர் இருக்கிற பக்கம் தலைவைத்து படுக்கக்கூடாது என்றான். பி. ஏ., பி. எல். படித்த வக்கீல் நாயகி இதற்கெல்லாம் வளைவாளா?

"சந்தேகம், சந்தோஷ வாழ்வின் சத்ரு" இப்படி வேதாந்தம் பேசினாள் நாயகி. ஆனால்..... நாயகி பப்ளிக் பிராசிகூட்டராக நியமிக்கப்பட்டாள். அதற்கப்புறம் அவள் கட்சி பிரசாரத்திற்கு போக முடியவில்லை.

இதனால் நாகராஜன் திருப்தி அடைந்தானா? எப்படி அடைய முடியும்? கோர்ட் விஷயம் என்று கூறிக்கொண்டு வீட்டுக்கே வராமலிருந்தாள், நாயகி; கணக்

கற்ற ஆண்களோடு கண்ட கண்ட இடங்களிலே சுற்றித் திரிந்தாள். கண்டித்துக் கேட்டால்....வழக்குக்கு வேண்டியவர்கள் என்று பதில் சொன்னாள்.

இதைக்கூட கொஞ்சநாள் பொறுத்தே வந்தான். ஆனால் அன்று இரவு அவன் கண்ட காட்சி.......

எவனோ கல்லூரியிலே கூடப் படித்தவனும், நாயகியைக் கட்டி அணைத்து முத்தமிட்ட காட்சியைக் கண்ணாடியிலே பார்த்துவிட்டான் நாகராஜன்.

வெளியே சொன்னால் வெட்கம்! சொல்லாமல் இருந்தால் வேதனை! வீட்டைவிட்டே வெளியேறி விட்டான்.

## 5. இது என்ன உலகம்

காடு மலை எல்லாம் சுற்றினான்; வருடங்கள் ஒன்று இரண்டு என்று மூன்றுக்குமேல் ஓடின. நாகராஜன் நடைப்பிணமாக அலைந்துகொண்டிருந்தான். வாடிய முகத்திலே தாடி வளர்ந்து, பிச்சைக்காரனிலும் கேடு கெட்டவனாகக் காட்சியளித்தான் லட்சாதிபதி நாகராஜன்.

காதல் என்பது கற்பனை! காதலின் பெயரால் நாட்டிலே தினமும் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்!

இந்த உடலைத் தீண்டும் உரிமை உங்களுக்குத் தான் என்று கூறிய நாயகி அடுத்தவன் அணைப்பிலே இருக்கிறாளே, இதுவா காதல்?

கல்யாணம் நடப்பதற்கு முன் காய்ச்சலாகப் படுத்திருந்த நாயகியிடத்திலே "நாயகி நாலுநாள் காய்ச்சலிலே மெலிந்து விட்டயே....மருந்தும் டானிக்கும் சாப்பிடு" என்று சொன்னதற்கு....உங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலே இரத்தம் என் உடம்பில் ஊறுமே என்று சொன்ன நாயகி, இன்று என்னை உதாசீனம் செய்துவிட்டு வாழ்கிறளே, இதுவா காதல்?

"காதலுக்கும் கடவுளுக்கும் பேதமில்லை" என்பார்கள்! உண்மைதான். எப்படி இல்லாத கடவுளை இருப்பதாகக் கூறி, அதற்கு ஆலயங்கட்டி, அப்பாவி மக்களை ஏமாற்றுகிறர்களோ, அதைப்போலத்தான் இல்லாத காதலை, அழகுபடக் கூறி கண்ணிலே மண்ணைத் தூவுகிறர்கள்.

இப்படி ஏதோ சொல்லி நாகராஜன் புலம்ப முடிந்ததே தவிர வாழமுடியவில்லை. பிச்சை எடுத்தான்; வீதியிலே படுத்தான்.

இந்தச் சமயத்தில்தான் தைப் பொங்கல் வந்தது. பட்சியினங்களுக்காவது வெண் பொங்கல் கிடைத்தது. நாகராஜனுக்கு அன்றைய உணவுக்கே பஞ்சம்.

இதே பொங்கல் திருநாளில் ஐந்து வருடங்களுக்கு முன் திருமணம்! ஆனல் இன்று....? நடைப்பிணம். நாளையோ மறுதினமோ மரணம்!

அன்று இரவு கையிலே கிடைத்த பிச்சைக் காசுடன் ஒரு குடிசையில் நுழைந்தான் நாகராஜன்.

கையிலே இருந்த பணத்தை அந்தக் குடிசையில் இருந்த பெண்ணிடம் கொடுத்தான். "ஐயா! கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள். சாப்பாடு தயார் செய்கிறேன். ஆனால்......"

அப்போது நுழைந்த போலீசார், அந்தப் பெண்ணையும் நாகராஜனையும் கைது செய்தனர். 'விப சாரக்' குற்றம் சாட்டி கோர்ட்டிலே நிறுத்தினர்.

'நிரபராதி' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த் தான் நாகராஜன். ஆனால் அந்தப் பெண் எப்போதோ விபசாரக் குற்றத்திற்காக முன்பு அபராதம் கட்டியவ ளாம்! இதைவைத்து நாகராஜனுக்கும் அந்தப் பெண் ணுக்கும் ஆறுமாதத் தண்டனை என்று சொல்லிவிட்டு நீதிபதி எழுந்து நின்றார்.

சிலைபோல் ஸ்தம்பித்து நின்ற நாகராஜன் நீதி பதி செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான் நீதிபதி ஆணல்ல, பெண்!

"யார் அந்த நீதிபதி? நாயகியா அந்த நீதிபதி? நான் விபசாரம் செய்தேன் என்று விபசார நாயகியா தீர்ப்பளிப்பது? இது என்ன உலகம்?"

விழித்துப் பார்த்தான். அவன் இருந்த இடம் சிறைக்கூடம்.

முற்றும்

# எமது சிறந்த வெளியீடுகள்

## அறிஞர் அண்ணாதுரை

| | | | |
|---|---|---|---|
| *மாஜி கடவுள்கள்* | 3 | 8 | 0 |
| *பார்வதி பி.ஏ.,* | 3 | 0 | 0 |
| *காதல் ஜோதி* | 2 | 8 | 0 |
| *ரங்கோன் ராதா* | 2 | 8 | 0 |
| *ஓர் இரவு* | 1 | 4 | 0 |
| *அண்ணாவின் சொற் செல்வம்* | 1 | 0 | 0 |
| *சூழ்நிலை* | 1 | 0 | 0 |

## தில்லை-வில்லாளன்

| | | | |
|---|---|---|---|
| *மல்லிகைத் தோட்டம்* | 1 | 0 | 0 |
| *மனப் போர்* | 1 | 0 | 0 |
| *தங்கத் தாமரை* | (அச்சில்) | | |

## பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

| | | | |
|---|---|---|---|
| கசப்பும் இனிப்பும் | 1 | 8 | 0 |
| மனித தெய்வம் | 1 | 4 | 0 |
| பிணங்கள் | 1 | 0 | 0 |
| வெறுங்கூடு | 1 | 0 | 0 |
| நினைவுச் சுழல் | 0 | 12 | 0 |
| தியாகச் சுடர் | 0 | 12 | 0 |
| கிழக்கும் மேற்கும் | (அச்சில்) | | |

## கே. ஜி. இராதாமணாளன்

| | | | |
|---|---|---|---|
| நீரோ | 1 | 0 | 0 |
| கானல் நீர் | 1 | 0 | 0 |
| அரக்கு மாளிகை | 2 | 0 | 0 |
| இளவரசி | 2 | 0 | 0 |
| அன்னம் | 1 | 0 | 0 |
| சபதம் | (அச்சில்) | | |
| வீணை | 2 | 8 | 0 |
| பூக் குடலை | 2 | 0 | 0 |
| சிந்தனைத் துளிகள் | 0 | 4 | 0 |

**பாரி நிலையம்,**

59, பிராட்வே, சென்னை-1.

# எமது சிறந்த வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| மாஜி கடவுள்கள் (அட்டை) | அண்ணா | 3 | 50 |
| பார்வதி பி. ஏ. | ,, | 3 | 00 |
| ரங்கோன் ராதா | ,, | 2 | 50 |
| காதல் ஜோதி | ,, | 2 | 50 |
| ஓர் இரவு | ,, | 1 | 25 |
| அண்ணாவின் சொற்செல்வம் | ,, | 1 | 00 |
| கசப்பும் இனிப்பும் | ஆசைத்தம்பி | 1 | 50 |
| மனித தெய்வம் | ,, | 1 | 25 |
| வெறுங்கூடு | ,, | 1 | 00 |
| பிணங்கள் | ,, | 1 | 00 |
| கிழக்கும் மேற்கும் | ,, | 1 | 00 |
| தியாகச் சுடர் | ,, | 0 | 75 |
| நினைவுச் சுழல் | ,, | 0 | 75 |
| வீணை | இராதாமணாளன் | 2 | 50 |
| இளவரசி | ,, | 2 | 00 |
| அரக்கு மாளிகை | ,, | 2 | 00 |
| பூக்குடலை | ,, | 2 | 00 |
| நீரோ | ,, | 1 | 00 |
| கானல் நீர் | ,, | 1 | 00 |
| சிந்தனைத் துளிகள் | ,, | 0 | 25 |
| டெக்காமெரான் I | பொக்காஸியோ | 3 | 50 |
| டெக்காமெரான் II | ,, | 3 | 50 |

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை 1

Jacket Printed at Neo Art Press, Madras-2